பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 29 வியாழக்கிழமை (13-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:159

## செம்மணி புதைகுழி வழக்கு:
## சந்தேக நபர்களில் ஒருவர் நாட்டை விட்டுத் தப்பினார்?

கொழும்பு,ஜூலை13

செம்மணி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 'ஆறு' சந்தேக நபர்களில் ஒருவரான பொலீஸ் உத்தியோகத்தர் அப்துல் நஸார் என்பவர் நாட்டை விட்டுத் தப்பிவிட்டாரா என்ற சந்தேகம் இரகசியப் பொலீஸாருக்கு ஏற்பட்டுள்ளதாம்.

குறிப்பிட்ட சந்தேக நபரை இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய முடியாத நிலை நீடித்து வருகிறது. இவர் நாட்டைவிட்டு வெளியேறி இருக்க வேண்டும் என்று சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து, இரகசியப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு,ஜூலை13

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் அவர் வீட்டில் தங்கியிருந்த சமயம் இந்த அநாமதேய தொலைபேசி அழைப்புக் கிடைத்தது."கட்சியின் தலைவர் பதவியில் இருந்து உடனடியாக விலகவும் இல்லையேல் ஒருவார காலத்துக் குள் சுட்டுக் கொலை செய்வோம்" என்று ஆங்கிலத்தில் பேசிய நபரொருவர் அவரை எச்சரித்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## நகல் அரசமைப்புச் சட்டம் முதலாம் திகதி சமர்ப்பிப்பு?

கொழும்பு,ஜூலை13

புதிய நகல் அரசமைப்புச் சட்டம் அனேகமாக ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது. அதற்கு முன்னர் நகல் சட்டத்தை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு ஆலோசித்துள்ள தாகவும் அரசாங்க வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்புச் சட்டம்மீதான விவாதம் ஒகஸ்ட் 8ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக - இடைவிடாது 24 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் சொல்லப்படுகிறது.

இப்போதைய நாடாளுமன்றத்தின் ஆறுவருட பதவிக்காலம் எதிர் வரும் ஒகஸ்ட் 24 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ)

# தீர்வு யோசனையை இப்போதைய வடிவில் ஏற்பதற்குத் தமிழ்க் கட்சிகள் மறுப்பு!

## தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்குப் போதாது என அறிவிப்பு

கொழும்பு,ஜூலை13

**அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனையை இப்போதைய வடிவில் ஏற்க முடியாது என்று தமிழ்க் கட்சிகள் மறுப்புத் தெரிவித்துள்ளன. இந்தத் தீர்வு யோசனைகளை தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என்று அவை அரசாங்கத்திடம் தனித்தனியாகத் தெரிவித்துள்ளன.**

தீர்வு யோசனையில் காணி அதிகாரம், வடக்கு - கிழக்கு இணைப்பு, நாட்டின் தன்மை ஆகியன குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முரணானவை என்று தமிழ்க் கட்சிகள் எல்லாமே தனித் தனியாக அரசிடம் நேரடியாகத் தெரிவித்தும் கருத்துக் கூறியும் உள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோது இந்தத் தீர்வுயோசனையை தாம் நிராகரிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் விவாதிக்க முத்தரப்புப் பேச்சு: புளொட், ஈ.பி.டி.பி. அரசிடம் கோரிக்கை!

கொழும்பு,ஜூலை13

அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டுள்ள உத்தேச தீர்வு யோசனை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை. எனவே அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இது விடயம் தொடர்பாக மேலும் விவாதிப்பதற்கு அரசு - ஐ.தே.க. - தமிழ்க் கட்சிகள் கொண்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தை, ஒன்றுக்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

அலரி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் முடிவில் ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். சுகவீனம் காரணமாக இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி பங்கு கொள்ளவில்லை.

அரசுத் தரப்பில் அமைச்சர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் விசேட தூதராக ஜெயக்கொடி பாக். விஜயம்

கொழும்பு,ஜூலை13

இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவி வழங்க வேண்டும்என்று கோரும் ஜனாதிபதியின் விசேட செய்தியுடன். கலாசார, சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பாகிஸ்தானுக்கு சென்றுள்ளார்.

நேற்று இங்கிருந்து புறப்பட்ட ஜெயக்கொடி இன்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பைச் சந்தித்துக் கலந்துரையாடி ஜனாதிபதியின் செய்தியைக் கையளிப்பார்.

பாகிஸ்தான் இலங்கைக்கு இது

(12ஆம் பக்கம் பார்க்க)

**5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே!**

## தரிக்காமல் சென்ற வான் மீது சூடு! சாரதியான தமிழர் உயிரிழப்பு!!

### கண்டியில் சம்பவம்

கொழும்பு,ஜூலை13

கண்டி மாவட்டத்தில் இங்கிரிய உறுகலவிலுள்ள பொலீஸ் சோதனைச் சாவடியில தரிக்காமல் சென்ற வான் ஒன்றின் மீது பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அந்த வானின் சாரதி கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஜோசப் என்ற தமிழர் என அடையாளம் காணப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கில் மு.காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு

கொழும்பு,ஜூலை13

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கொழும்பு, புத்தளம், கண்டி மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனித்துப் போட்டியிடுவதென ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

மேலும் 14 மாவட்டங்களில் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடுவதென்றும் நேற்று முன்தினம் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பீடக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அக்கட்சியின் செய

(12ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய்க் கல்லூரிகள் இடையூறின்றி இயங்க ஏற்பாடு

### நேற்றைய கூட்டத்தில் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை இன்னும் இரு வாரங்களுக்குள் வேறு இடத்துக்கு மாற்றி இவ்விரு பாடசாலைகளும் இடையூறின்றிச் செயற்பட ஏற்பாடு செய்வதென்று நேற்று இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இந்த இரு கல்லூரிகளினதும் அதிபர்கள், மாணவர் பிரதிநிதிகள், செயலக அதிகாரிகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்திலேயே இவ்

(12ஆம் பக்கம் பார்க்க)



இடம்பெயர்ந்த மக்களை வெளியேற்றி கல்விச் செயற்பாடுகள் இடையூறின்றி நடைபெற ஏற்பாடு செய்யுமாறு கோரி மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி மாணவர்கள் நேற்று மறியல் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த விவகாரத்துக்கு இணக்கத்தீர்வு காண்பதற்காக யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணதிலக ஆகியோர் மாணவர் பிரதிநிதிகளுடனும் அதிபர்களுடனும் கலந்துரையாடுவதையும் படத்தில் காணலாம். (படங்கள்:- அனுராஜ்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அம்பாறையில் சகல தமிழ்க்கட்சிகளையும் ஒரே அணியில் போட்டியிட வைக்க முயற்சி!

மட்டக்களப்பு,ஜுலை13

அம்பாறை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு தமிழ்ப்பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் சகல தமிழ்க்கட்சிகளையும் ஒரே அணியில் போட்டியிட வைக்கும் முயற்சியில் தமிழர் மகா சபை ஈடுபட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறையில் கூடிய இந்தச் சபையின் கூட்டத்தில் இது விடயமாக ஆராயப்பட்டது.

சகல தமிழ்க் கட்சித் தலைவர்களையும் சந்தித்து இந்த முயற்சி தொடர்பாகத் தெரிவித்து இணக்கம் ஒன்றைக்காண 25பேர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி இந்தக் குழு கூடி எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவிருக்கின்றது.

(இ-க-3)

**நல்லூர் பரி.யாக்கோபு ஆலய பாலர் பாடசாலை**

மேற்படி பாடசாலை வழமை போன்று நடைபெறுகிறது என்பதை பெற்றோருக்கு அறியத்தருகிறோம்.

(C/12198) - நிர்வாகத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 - 09 - 1945



மறைவு 30 - 05 - 2000

**அமரர் கிருஷ்ணன் சுப்பிரமணியம்**

(கட்டைவேலி - நெல்லியடி பல நோ.கூ.ச. கிளைமுகாமையாளரும், மூத்த உறுப்பினரும்)

திதி: 13 – 07 – 2000

மணியம் என்ற ஒரு மறவர் குலமகன்
பணிவுடையவன் நல்ல பண்பிற் சிறந்தவன்
அணிகலன் அவனுக்கு அன்பும் அடக்கமும்
பணியாளன் அவன் கூட்டுறவுச் சங்கமதில்!
பணி மூப்பின் முன் குடும்பப் பணிகளை
தான் முடித்திடவே,
பணி செய்தபோது தன் தாய், மனைவி, மக்கள்
சுற்றமெலாம்
அணி அணியாய் அலற, வைகாசித் தேய்பிறை
துவாதசியில்
தணிகை முருகன் கழலடியே சேர்ந்து விட்டான்!!

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

குறிப்பு:- அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் சாரையடி வீரபத்திரா ஆலய அந்தியேட்டி மடத்தில இன்று (13-07-2000) வியாழக்கிழமை நடைபெறும். தொடர்ந்து வீட்டில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி. (76364)

## 31 ஆம் நாள் நினைந்துருகல்



அமரர்

**சுப்பிரமணியம் பாஸ்கரன்**

(கோ/கணபதி வித்தியாலய ஆசிரியர்)

பால்ய வயது முதல் பாசமிகு நண்பனானோம்
சால்புறு நட்பு சான்றாய் இன்றுமே நிலைக்குதையா
பாரினில் வாழ்வு நீங்கி பறந்து நீ
சென்ற சேதி
தாங்கொணாத் துயர் தந்தெம்மை
தவிக்கவே வைக்குதையா
சாந்தி பெற்றுந்தன் ஆன்மா மேன்மை
பெற்றுய்திடவே
நண்பர் நாம் வேண்டுகின்றோம்
நாளிலும் உளநாள் மட்டும

இணைபிரியா நண்பர்கள் சார்பில்
த. வரதராஜா

இருபாலை,
கோப்பாய். (76383)

# தேர்தல் நேர்மையாக நடத்தப்படும்; மக்கள் அமைப்பு நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை13

விரைவில் நடைபெற உள்ள நாடாளுமன்றத்தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்படும் என சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் நிர்வாக அமைப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ கருத்துத் தெரிவிக்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் பல விவகாரங்களில் கருத்தொற்றுமை கண்டுள்ளன. சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் இவை திட்டமிட்டு வருகின்றன.

தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

தற்போது 43 அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட பதிவு செய்துள்ளன.

இம்மாத இறுதிக்குள் தேர்தலில் போட்டியிடும் அ[illegible] கட்சிகளையும் அழைத்[illegible] அவற்றின் எதிர்காலத் திட்ட[illegible] பற்றி கலந்துரையாட உள்ளோம். தேர்தல் ஆணையாளரையும் சந்திக்க உள்ளோம். இப்படி றொட்றிக்கோ மேலும் தெரிவித்தார்.

(இ-க)

## தெரிவான மாணவர் விவரம் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஜுலை13

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களின் விபரங்கள் துணைவேந்தரினால் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த விவரங்களை யாழ். பல்கலைக்கழகத்திலபார்வையிடலாம் எனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

(இ-க)

## சணல் அமோக விளைச்சல்

சண்டிலிப்பாய்,ஜுலை13

கட்டுடை,சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் இம்முறை சணல் செய்கை அமோக விளைச்சலைத் தந்துள்ளது. இப்பகுதியில் சணல் விதையை கிலோ 25 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ள கூடியதாக உள்ளது என்று மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன தலைவர் சி. பொ.ம.க.முதலியார் தெரிவித்தார்.

பயிர்ச்செய்கைக்கு சணல் நல்ல இயற்கைப் பசளை என்றும்-

விவசாயிகள் தங்கள் தோட்டப் பயிர்களுக்கு இதனை பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறமுடியும் என்றும் - அவர் மேலும் தெரி வித்தார். (இ-

தீவுப்பகுதி தூரஇடத்து மாணவர்களின் நலன் கருதி

**O/L**

**SAT. SUNDAY CLASS**

(9.00 - 2.00 மணி)

பிரத்தியேக வகுப்பு

கணிதம்
திரு. C.K.B தயாளன்
(1.30)

விஞ்ஞானம் திரு. தேவா
(12.30)

ஆரம்பம் 15-07-2000

விக்னா கல்வி நிறுவனம் (76384)

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

இன்று மட்டும்
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன் நடித்த

**அருணாச்சலம்**

புதிய நேரம் 10.30, 2.00

நாளை
பிரபுதேவா, ரோஜா மற்றும் பலர் நடிப்பில்

**இந்து**

(C/12143)

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

M.G.R. ஜெயலலிதா நடித்த

**குடியிருந்த கோயில்**

(ரீஸ்ஸ்)

காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)

(C/12174)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 12 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

513/135796/A, 513/144168/A,
513/144168/B.

### சாவகச்சேரி

522/141639/A, 522/141639/B,
522/141639/C, 522/141654/A,
522/141678/A, 522/141678/B
22/143486/A, 522/143486/B,
522/143560/A, 522/143560/B,
522/147457/A, 522/147457/B,
522/147467/A, 522/147467/B,
522/147469/A, 522/147469/B,
522/147471/A, 522/147471/B,
522/147471/C, 522/147471/D,
522/148742/A, 522/148742/B,
522/153071/A, 522/153071/B.

### யாழ்ப்பாணம்

511/145094/A

### கோப்பாய்

511/145187/A, 511/145187/B,
511/145187/C, 511/145187/D,
511/145187/E, 511/145244/A,
511/145244/B 511/145244/C,
511/145259/A.

### நல்லூர்

511/136843/A, 511/144801/A,
511/144801/B, 511/144801/C,
511/144801/D, 511/144899/A,
511/144900/A, 511/145030/A,

511/145051/A, 511/145058/A,
511/145253/A, 511/145267/A,
.511/145267/B, 511/145313/A,
511/145314/A, 511/145334/A,
511/145538/A, 511/145551/A,
511/145567/A, 511/145700/A,
513/143980/A, 513/144203/A,
513/144203/B, 513/144203/C,
513/144203/D, 513/144203/E,
513/144203/F, 513/152544/A,
513/152544/B, 513/152544/C,
513/152544/D.

### சண்டிலிப்பாய்

513/143934/A, 513/144068/A,
513/144068/B, 513/144165/A,
513/144165/B, 513/144165/C,
513/144177/A, 513/144177/B,
513/148234/A, 513/148257/A,

### தெல்லிப்பழை

513/143926/A, 513/143926/B,

### உடுவில்

511/123111/A, 511/145101/A,
511/145101/B, 511/145176/A,
511/145176/B, 511/145176/C,
511/145176/D, 511/145177/A,
511/145177/B, 511/145184/A,
511/145184/B, 511/145184/C,
511/145184/D, 511/145196/A,
511/145196/B, 511/145196/C,
511/145251/A, 511/145252/A
511/145281/A, 511/145282/A,
511/145282/B, 511/145283/A,
511/145283/B, 511/145283/C,
511/145292/A, 511/145292/B,
11/145293/A, 511/145293/B,
513/144083/A, 513/144116/A,
513/147075/A, 513/147075/B,
513/147075/C, 513/147075/D.

# விசர்நாய்க்கடி குறித்து கூடுதல் கவனம் தேவை

யாழ்ப்பாணம்,ஜுலை13

சமீபகாலமாக இளம்பிள்ளைகள் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி மரணமாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதற்குப் பெற்றோர்களின் அக்கறையின்மையே காரணமாக அமைகின்றது. இதற்கு ஒருபடி மேலாக பெற்றோர்கள் கேட்டும் சில வைத்தியசாலைகளில் விசர்நாய்க்கடிக்கான தடுப்பு ஊசி போடாத சம்பவங்களும் நீதி மன்றங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறு கூறினார் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு.

விசர்நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்த சிறுவன ஒருவரின் மரண விசாரணையின்போது அவர் இதைத் தெரிவித்தார்.

மிருசுவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து துன்னாலை மேற்கு கரவெட்டிப் பகுதியில் தங்கியிருந்த மகேந்திரன் தனஞ்சயன் என்ற ஐந்து வயதுச் சிறுவனே விசர்நாய்க் கடிக்கு இலக்காகி மரணமானவராவார்.

ஒரு மாதத்துக்கு முன்னரே மேற்படி சிறுவன் விசர்நாய்க் கடிக்கு இலக்கானதாகவும் எனினும் தடுப்பு ஊசி போடாத காரணத்தால் மேற்படி சிறுவனுக்கு மரணம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**"முயற்சி"**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்
திறன் விருத்தி மையம்

**பயிற்சி நெறிகள் ஆரம்பம்**

எமது 108, 4ஆம் குறுக்குத் தெரு பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற

1. தமிழ்த் தட்டச்சு
2. ஆங்கிலத் தட்டச்சு
3. உடையமைத்தல்

ஆகிய பயிற்சி நெறிகள்

**மானிப்பாய் வீதி, உரும்பிராயில்**

அமைந்துள்ள எமது தற்காலிக அலுவலகத்தில் **17-07-2000**ஆம் திகதியில் இருந்து காலை 9.00 - 1.00 மணிவரை மீண்டும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். மாணவர்கள் தவறாது சமுகம்தரவும்.

குறிப்பு:- மேற் குறிப்பிட்ட பயிற்சி நெறிகளில் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி:- 01-08-2000**

★ பயிற்சி நெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(C/12199)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அமெரிக்காவில் 2 கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் 200 பேர் பலி!

## மீட்புப் பணிகள் தீவிரம்

வாஷிங்ரன், ஜூலை 13
அமெரிக்காவில் இரண்டு குடியிருப்புக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் 200 பேர் வரை இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நியூயோர்க் நகரில் பல மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடத்தொகுதிகளே நேற்று முன்தினம் இரவு இடிந்து விழுந்தன.

குடியிருப்பாளர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இது நடந்ததால் தப்ப வழியில்லாது இடிபாடுகளுக்கிடையே நசுங்கி அவர்கள் இறந்தனர்.

கட்டடங்கள் இடிந்து விழுந்ததற்கான காரணம் தெரியவில்லை என்று நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கட்டுமானத்தில் ஏற்பட்ட குறைபாடுகளே இந்தக் கோரச் சம்பவத்திற்கு காரணம் என்று கருதப்படுகிறது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களில் எவராவது உயிரோடு இருக்கலாம் என்ற எதிர்பார்ப்போடு மீட்புப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

# மாணவனைப் பொறாமையால் சுட்டுக் கொன்ற நண்பர்கள்

வெளிஞூலாவில் அபார நடனம் ஆடும் திறமையால் சக மாணவிகளைக் கவர்ந்தவரை பொறாமையால் நண்பர்கள் சுட்டுக்கொன்று விட்டனர்.

லாவன்சியா நகரில் உள்ள பிரபல பாடசாலையில் படிக்கும் 15 வயதான ஜேக்சன் மாண்டிரோ என்பவரே கொல்லப்பட்டவராவார்.

பாடசாலையிலும் வெளியிலும் நடைபெறும் விழாக்களிலும் போட்டிகளிலும் தனது நடனத் திறமையால் பாராட்டுக்களையும் பரிசுகளையும் ஜேக்சன் பெற்றுவந்தார்.

இதனால் அவருடன் படிக்கும் மாணவிகள் ஜேக்சனால் கவரப்பட்டனர், அவருடன் பேசுவதற்கும் சேர்ந்து அமர்ந்து உணவருந்தவும் அந்த மாணவிகள் ஆர்வம்காட்டினார்கள்.

இது ஜேக்சனின் நண்பர்களிடையே பொறாமையை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து பாடசாலை முடிந்து வெளியேறிக் கொண்டிருந்த சமயம் அனைவர் முன்னிலையிலும் ஜேக்சனை நண்பர்களில் ஒருவன் கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டான்.

# பலஸ்தீனப் பிரச்சினை குறித்து முத்தரப்புக் கூட்டம் ஆரம்பம்

வாஷிங்ரன், ஜூலை 13
பலஸ்தீனப் பிரச்சினையில் முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக அமெரிக்காவின் ஏற்பாட்டில் கூட்டப்பட்டுள்ள முத்தரப்புக் கூட்டம் நேற்று காம்டேவிட் சுற்றுலா நகரில் ஆரம்பமானது.

எட்டு நாள்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் மற்றும் இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக் ஆகியோருடன் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனும் கலந்து கொள்கிறார்.

52 ஆண்டுகால இஸ்ரேல்—பலஸ்தீனப் பூசலுக்கு இந்தக் கூட்டத்தில் தீர்வுகாணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெருசலேமின் அந்தஸ்து, பலஸ்தீன நாட்டு எல்லைகள், அகதிகளின் நிலை மற்றும் யூதக் குடியிருப்புகளின் வருங்காலம் ஆகியவை குறித்து தலைவர்கள் ஆலோசனை நடத்துவார்கள்.

இதற்கிடையில் பிரதமர் எகுட்பராக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு இஸ்ரேலில் பலத்த எதிர்ப்பு எழுந்துள்ள சூழ்நிலையில், தலைவர்களிடையே ஏற்படுத்தப்படும் இறுதி உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன. (இ-ஒ)

# பிஜியில் தடுத்து வைக்கப்பட்டோரில் 9 பேர் விடுதலை செய்யப்பட்டனர்

## சௌத்ரி உட்பட மற்றவர்கள் காவலில்

சுவா, ஜூலை 13
பிஜியின் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 பேரில் இந்திய வம்சாவளியினர் உட்பட 9 பேரை கிளர்ச்சியாளர்கள் நேற்று விடுதலை செய்தனர்.

ஆனால் மகேந்திர சௌத்ரி மற்றும் அவரது மகனான ராஜேந்திரா உட்பட 18 பேர் தொடர்ந்தும் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 9 பேரும் பஸ் மூலம் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கிளர்ச்சியாளர் சார்பில்பேசிய பேச்சாளர் ஜோனட்டோ கூறியுள்ளார்.

இதற்கிடையில் இராணுவத்துடன் கிளர்ச்சியாளர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி புதிய பிரதமரையும், ஜனாதிபதியையும் தெரிவு செய்வதற்காக பூர்விக குடிகளின் தலைவர்கள் பேரவை இன்று கூடுகிறது.

இதேசமயம் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ்ஸ்பைட் 'தொடர்ந்து நாட்டுக்குச் சேவை செய்வதே தனது விருப்பம்' என்று கூறியுள்ளார். இது பிரதமராகும் அவரது ஆசையை வெளிக்காட்டுவதாகக் கருதப்படுகிறது.

இதனால் பிஜியின் அடுத்த பிரதமராக ஸ்பைட்டே தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும் ஸ்பைட் பிரதமரானால் உடனடியாக இடைக்கால அரசை அமைப்பார் என்றும் கூறப்படுகிறது. (இ-ஒ)

## 45 பேர் விடுதலை

சுவா, ஜூலை 13
பிஜியில் வடமேற்கே உள்ள சேர்ச்சில் தீவில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட்டின் ஆதரவாளர்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்த சுற்றுலாப் பயணிகள் 45 பேரும் விடுவிக்கப்பட்டதாகப் பிந்திக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-ஒ)

# கைதிகளின் விடுதலைக்காக விரலை வெட்டி அனுப்பியபெண்

ஜோலோ, ஜூலை 13
பிலிப்பைன்ஸ்ஸில் பெண் ஒருவர் தனது இடது கையின் நடுவிரலை வெட்டி தீவிரவாதிகளுக்கு அனுப்பியுள்ளார் அத்துடன் நீண்ட நாள்களாக பணயம் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை விடுவிக்கும்படி தனது இரத்தத்தால் எழுதிய கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

லேகபுலொட் என்ற 30 வயதுப் பெண் எழுத்தாளரே இதனைச் செய்துள்ளார்.

இவர் எழுதிய இரத்தக் கடிதத்தில் அன்புள்ள ரொபொட் (தீவிரவாதத்தலைவர்) அறிவது,

இந்தத் துண்டிக்கப்பட்டவிரல் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் எனக்குள்ள உண்மையான ஈடுபாட்டைக் காட்டும். தயவு செய்து உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள ஜேர்மனிப் பெண்மணியை உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று எழுதியுள்ளார்.

பணயக்கைதிகளில் 57 வயதான ஜேர்மனைச் சேர்ந்த ஆசிரியை ரென்னெட்வலேர்ட் என்பவரின் உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளது.

இவரை விடுவிப்பதற்காக லேகபுலொட் தனது விரலை வெட்டி, ஒரு போத்தலில் இட்டு, இரத்தக் கடிதத்துடன் தீவிரவாதிகளுக்கு அனுப்பியுள்ளார்.

மலேசியாவில் இருந்து 3 மாதங்களுக்கு முன் மேற்படி பணயக் கைதிகள் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ)

# மியான்மரில் 3 ஆண்டுகளின்பின் பல்கலைக்கழகங்கள் ஆரம்பம்

சைக்கோன், ஜூலை 13
மியான்மரில் 3 ஆண்டுகளுக்கு முன்னர் தடைசெய்யப்பட்ட பல்கலைக்கழகங்கள் மீண்டும் நடைபெற இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதி வழங்கி உள்ளனர்.

மியான்மரில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வருவதற்காகப் போராடி வரும் அவுன்சான் சூக்கி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாகப் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் போராட்டங்களில் குதித்தனர். இதனால் மூன்று ஆண்டுகளின் முன் அந்த நாட்டிலிருந்த 30 பல்கலைக் கழகங்களையும் இராணுவ அரசு காலவரையறையின்றி மூடும்படி உத்தரவிட்டது.

1996 ஆம் ஆண்டுடிசம்பரில் வருடாந்தப் பரீட்சைகள் ஆரம்பிக்கச் சில நாள்களுக்கு முன்னராகப் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. இதனை எதிர்த்த மாணவர்கள் மீது அப்போது பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்வரும் 24 ஆம் திகதி பல்கலைக்கழகங்களைத் திறக்க இராணுவம் முடிவு செய்துள்ளது. (ஒ)

## கிளின்ரன் - புடின் உரையாடல்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுடன் தொலைபேசியில் உரையாடினார்.

தோல்வியடைந்த அமெரிக்க ஏவுகணைத்திட்டம் மற்றும் செச்சினியப் பிரச்சினை ஆகியன குறித்து அப்போது இரு தலைவர்களும் பேசியதாகவும் புடின் தொலைபேசியில் கிளின்ரனை அழைத்து உரையாடுவது இது இரண்டாவது தடவை என்றும் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


### தொண்டமான் இறுதி மூச்சுவரை பாராட்டிய

# பிரபாகரனை இழித்தும் பழித்தும்பேச ஜெயலலிதாவுக்கு அருகதை இல்லை

## பழ. நெடுமாறன் கூறுகிறார்

சென்னை, ஜூலை 13
மலையகத் தமிழர்களின் தலைவரான தொண்டமான் இறுதி மூச்சு உள்ளவரை பாராட்டிய பிரபாகரனை இழித்தும் பழித்தும் பேச ஜெயலலிதாவுக்கு அருகதை கிடையாது என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஜெயலலிதா அண்மையில் வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலடியாக




நெடுமாறன் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரபாகரனோ, விடுதலைப் புலிகளோ இல்லாது போனால் ஈழத் தமிழர்கள் பூண்டொழிக்கப்படுவார்கள்.

செம்மணிப் புதைகுழிக் கொலைகளைக் கண்டித்து ஜெயலலிதா ஒரு வார்த்தை கூடப்பேசியதில்லை. தமிழ்ப் பெண்கள் கற்பழித்துக் கொலைசெய்யப்பட்ட போதும் ஜெயலலிதா வருந்தியதில்லை.

யாழ்ப்பாணத்தை வைத்து விடுதலைப் புலிகள் தமிழீழத்தை அமைக்கப் பாடுபடுவதாகக் கூறியிருப்பது அவரின் அறிவீனத்தையே காட்டுகிறது.

'ரொசோ' மாநாட்டில் அனைத்து அமைப்புகளும் சேர்ந்து முன்வைத்த 4 அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் மட்டுமே அரசுடன் பேச முடியும் என்று புலிகள் தெளிவாக அறிவித்துள்ளனர். அந்தக் கோரிக்கையில் மலையகத் தமிழர்கள் உட்பட இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் அடங்கியுள்ளன என்ற உண்மை தெரியாமல் ஜெயலலிதா பேசுகிறார்.

அ. தி. மு. கவின் நிறுவனரான எம். ஜி. ஆர். பிரபாகரனை எந்தளவு நேசித்தார் என்பதும், விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாக நின்றார் என்பதும் ஜெயலலிதாவுக்கு தெரிய நியாயமில்லை.

ஜெயலலிதாவின் இந்தத் திடீர் ஆவேசத்திற்கு தமிழகத்தில் தமிழர்களுக்கு விரோதமாக இயங்கிவரும் சக்திகளின் ஆலோசனைகளும், அவரைச் சந்தித்த இலங்கை அரசின் தூதுவரின் தூண்டுதலுமே காரணம் என்று தெளிவாகத் தெரிகிறது.

இலங்கைத்தமிழர் பிரச்சினையை தனது அரசியல் இலாபத்துக்கு ஜெயலலிதா பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். (இ-ஒ)

# பிரிட்டனில் 30 ஆயிரம் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிப்பு

கேப்டவுண், ஜூலை 13
பிரிட்டனில் 30 ஆயிரம் பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் 'எய்ட்ஸ்' நோய் சர்வதேச விழிப்புணர்ச்சி மாநாட்டில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனில் ஒவ்வொரு ஆயிரம் பேரிலும் ஒருவருக்கு எய்ட்ஸ் நோய்ப்பாதிப்பு இருப்பதாகவும்— பதினைந்து வயதிலிருந்து நாற்பத்தொன்பது வயதுக்கு உட்பட்டவர்களே 'எய்ட்ஸ்' நோயைப் பரப்புவதில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் மாநாட்டில் கூறப்பட்டது. (ஐ-ஒ)

# வாழ்த்துகிறோம்

## யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி

எமது கல்லூரியில் 15 வருடகாலம் சேவையாற்றி 13 - 07 - 2000 வியாழக்கிழமை (இன்று) இளைப்பாறும் உயர் சேவை மனம் படைத்த ஆசிரியை

## திருமதி குணமணி சிவஞானம்

அவர்களைப் பாராட்டி நீண்ட ஆயுள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், அதிபர்.

யா/வதிரி திரு இருதயக் கல்லூரி.

(76394)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் V. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட V. சுப்பிரமணியம் 09 - 07 - 2000 அன்று கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் முன்னாள் வழிபடுவோர் சங்கத் தலைவர் ஆவார்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வழிபடுவோர் சங்கம்.

76392)

# மரண அறிவித்தல்கள்

## திருவம்பலம் சிவமயம்

தொல்புரம சித்தன்கேணியைச் சேர்ந்த திருவம்பலம் சிவமயம்(முன்னாள் அதிபர் தேயிலை தொழிற்சாலைமரங்பொடைநேற்று(12-7-2000)புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் பார்வதியாரின் அன்புக் கணவரும் அமரர் இராமஜெயம் (புசத்தனை தோட்டம், கம்பளை), அவர்களின் அன்புச்சகோதரனும் ஸ்கந்தமயம் (Action Contrela Faim) திருவம்பலமயம், சிவபதி அம்பாள், அருள்மயம், மகாமயம், லிங்கமயம் ஆகியோரின் அன்புத்தந்தையும் லீலாவதி, லோகேஸ்வரி, பத்மநாதன் (உதவி பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி), சாவித்திரி, ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆலவன், ஆதிபன், சிறிராம், ரம்மியா, அகிலவன் ரகுராம், சிவரோஷன், நவநீதா, விதுஷன், நர்மதா, ஆகியோரின் அன்புத் தாத்தாவும் திருமதி இரத்தினேஸ்வரி, இராமஜெயம், கொழும்பு) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12-7-2000) புதன்கிழமை பி. ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வழக்கையாறு மயானத்தில் இடம்பெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்,
'ராம்றாஜ்' சித்தன்கேணி, (76379)

## விஜயசிங்கம் சிவபாஸ்கரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயசிங்கம் சிவபாஸ்கரன் கொழும்பில் (08 - 07 - 2000) சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா விஜயசிங்கம் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), — சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் விஜயகுலசிங்கம் (அளவெட்டி), சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), வள்ளி நாயகிதேவி (அளவெட்டி), சிவகுமாரன் (கோண்டாவில்), சிவலோகநாயகிதேவி (கனடா), சிவசண்முகநாதன் (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இரஞ்சிதமலர், அமிர்தாம்பிகை (ஜேர்மனி), தியாகராசா, ஜெயராணி, ஜெகநாதன், லிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் விஜயரட்சகன் (யாழ். பல்கலைக்கழக மாணவன்), உமாசங்கர், கஜமுகன், சிந்துஜா, சிவதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் யாழினி, கபில்ராஜ், (பவதாரணி தஜாணன்—கனடா), ஆகியோரின்மாமனாரும் விஜய, துவாரகனின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வி. சின்னத்தங்கம் (தாய்),
வி. சிவசண்முகநாதன் (தம்பி)
விஜிதா வர்த்தக நிலையம், உரும்பிராய்.

முகவரி:-
முதலாம் ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய். (76385)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

## கல்வி முதுமாணி கற்கைநெறி

இக்கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துத் தேர்வொன்று நடைபெறும்.

திகதி:- 2000-07-23
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- மு.ப. 10.00
மு. ப. 12-00

இடம்:-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இத்தேர்வானது விண்ணப்பதாரிகளின் கல்விசார் பொதுத் தகைமையைச் சோதிப்பதாக அமையும்.

இத்தேர்வுக்கான அனுமதி அட்டைகள் தனித்தனியாக தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

— பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
2000 - 07 - 11
(சி-12196)


# தாண்டிக்குளம்-ஓமந்தை ரயில்பாதை அகற்றப்படுகிறது

வவுனியா, ஜூலை 13

வவுனியாவில் தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரை கடந்த வருடம் ஒரு கோடிரூபா செலவில் அமைக்கப்பட்ட ரயில்பாதையை அகற்றுமாறு வவுனியா ரயில்வேப் பொறியியல் பிரிவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை வரை ரயில் சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் ஒன்பது மைல் நீளமான இந்தப் பாதையை ரயில்வே திணைக்களத்தினர் அமைத்திருந்தனர்.

இந்தப்பாதை அமைக்கப்பட்டும் சேவை இடம்பெறாத நிலையில்— பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாதையை அகற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாதையில் உள்ள தண்டவாளங்களை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-164-3)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தொண்டமனாறு தச்சன்கொல்லை சித்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேக ஆரம்பக்கிரியைகள் கடந்த திங்கட்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றன. (இ-க)

★ ★ ★

சுதுமலை எச்சாட்டி சின்ன வைரவர் ஆலய புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணிமுதல் 10 மணிவரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறும்.

(க-10)

★ ★ ★

மல்லாகம் கைலாய வளவு ஸ்ரீ சிவஞான வைரவ சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8-24 மணி முதல் 9-00 மணி வரையுள்ள நேரத்தில் நடைபெறும்.

அடியார்கள் எண்ணைக் காப்புச் சாத்துதல் நிகழ்வு இன்று வியாழக்கிழமைகாலை 9 மணிமுதல் மாலை வரை நடைபெறும். (க-30)

★ ★ ★

நல்லூர், ஜூலை 13

திருநெல்வேலி சிவகாமசுந்தரி ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை சங்கராந்தித் தீர்த்த உற்சவமும் மாலையில் பூரணை உற்சவமும் நடைபெறும்.

(க-103)


# வேலணை பிரதேச சபை, வேலணை.

## வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் 25 - 07 - 2000 ஆம் திகதி பிற்பகல் 11 00 மணி வரை வேலணைப் பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரை வைத்துப் பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிட்டு இரண்டாவது பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம். அவர்களுக்கு 25-07-2000 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. கேள்விகள் 25-07-2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்குத் திறக்கப்படும் அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
06. மீளளிக்கக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% வைப்பிலிடல்.
07. கேள்விப் பத்திரங்கள் 24-07-2000 ஆம் திகதி பகல் 12. 00 மணிவரையும் எம்மால் வழங்கப்படும்.
08. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | சுடலைமடம் அமைத்தல் சரவணை, வேலணை. | 1200/- | 250/- |
| 02. | சிறுவர் பாடசாலை அமைத்தல் அம்பிகை நகர், வேலணை. | 2000/- | 250/- |
| 03. | விதானையார் வீதி திருத்தம் சரவணை, வேலணை. | 2000/- | 250/- |
| 04. | குடலைப்பே வீதி திருத்தம் நயினாதீவு. | 2000/- | 250/- |
| 05. | புங்குடுதீவு உப அலுவலகம், பொது மலசலகூடம் திருத்தம் | 400/- | 250/- |
| 06. | திருவள்ளுவர் சனசமூக நிலையம் திருத்தம் சின்னமடு, வேலணை. | 400/- | 250/- |

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
ஜே. பி. யூ. எம்.
தலைவர்.
வேலணைப் பிரதேச சபை, வேலணை.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
தலைமைச் செயலகம்.

(சி/12197)

உதயன்

## அரசாங்கத்தின் மனமாற்றம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆளுங்கட்சிக்கும் மூத்த எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இணக்கம் காணப்பட்டது குறித்தே இப்போது எங்கும் பேச்சு. அந்த இணக்கப்பாட்டில் உள்ள எல்லா அம்சங்களையும் விவரமாக அறிந்து கொள்வதில் தமிழ் மக்கள் எல்லோரும் ஆவலாக உள்ளனர். ஆனால் அந்த விவரத்தை எழுத்துக்கு எழுத்து அறியும் வாய்ப்பு இன்னும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. தமிழ்க் கட்சிகளுக்கு மட்டுமே இதுவரை இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தமிழர்களுக்குரிய உரிமைகள் முற்றாக வழங்கப்படக்கூடாது என்பதில் அக்கறை உள்ள சிங்கள அரசியல்வாதிகளும் இணக்கப்பாட்டின் அம்சங்களை நுணுக்கமாக ஆராய விழைவர். அவற்றில் எவற்றை அடிப்படையாக வைத்து எதிர்ப்புத் தெரிவிக்கலாம் என்று மண்டையைக் குழப்புவார்கள். இவ்வாறாக அரசு - எதிர்க்கட்சி இணக்கப்பாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகி உள்ளது.

அதே முக்கியத்துவத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிந்திய நிலைப்பாடும் பெற்றுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு எந்தவகை நிபந்தனையும் இன்றி விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்ற ஜனாதிபதியின் தகவல் எல்லோரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

விடுதலைப்புலிகளைப் புறக்கணித்து விட்டு இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடப் போவதாகக் கூட ஜனாதிபதி ஒரு கட்டத்தில் கூறியதுண்டு. பின்னர் சற்று மனம் மாறி, விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கத்தின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்து வந்தார். மேலும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே அவர்களுடன் பேச முடியும் என்று கூறியிருந்தார். ஆகக் கடைசியாக, விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்கு வந்து தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்தால் மட்டுமே அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளை அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பமுடியும் என்று கூறிவந்தார். இப்போது அவர் தனது நிலைப்பாட்டை மாற்றி விட்டார். அதாவது நிபந்தனை எதுவும் இல்லாமலே விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் தயார் என்று ஜனாதிபதி இப்போது கூறுகிறார்.

அது மட்டுமன்றி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், அவர்களை ஆயுதங்களைக் களைந்துவிட்டு வருமாறு கேட்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று அரசு உணர்ந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அரசு தனது நிலைப்பாட்டை மாற்றியிருப்பதனை பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

இனப்பிரச்சினை - தமிழர்களின் பிரச்சினை - வேறு; புலிகளின் பிரச்சினை வேறு என்றவாறு கொண்டிருந்த தனது எண்ணத்தை மாற்றிய காலேயே நிபந்தனை எதுவுமின்றி விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு முன் வந்திருக்கிறது எனக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினையிலிருந்து பிறந்ததுதான் போர். அரசாங்கமும் விடுதலைப்புலிகளுமே போரில் ஈடுபட்டுள்ளனர். இனப்பிரச்சினையைத் தீர்த்தாலன்றிப் போருக்கு முடிவு கட்ட முடியாது என்றே அரசாங்கத் தரப்பினரும் கருதுகின்றனர் - கூறிவருகின்றனர். இனப்பிரச்சினையில் விடுதலைப்புலிகளும் அங்கமாகியுள்ளனர்.

இத்தகைய ஒரு பின்னிப் பிணைந்த சூழ்நிலையில், விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டுத் தீர்வு காணமுடியும் என்ற தனது கற்பனா உலகத்திலிருந்து அரசாங்கம் யதார்த்தத்துக்குத் திரும்பியிருப்பது நல்ல சகுனம் எனலாம். இன்றைய புதிய நிலைப்பாட்டில் இருந்து அரசு திடீரென மாறாதிருக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

# என்று தீரும் இந்த எரிபொருள் பிரச்சினை?

யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பாக யாழ். செயலக மட்டத்தில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பன பலதடவைகள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டன. ஆயினும் அவற்றின் விநியோகத்தில் இதுவரையும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. மக்களோ, எரிபொருள் தேடி அலைகிறார்கள்!

கடந்த நான்கு மாதங்களாக மண்எண்ணெய், டீசல், பெற்றோல் ஆகிய எரிபொருள்களை வழமை போன்று தாராளமாகப் பெற முடியாத நிலை தொடர்கிறது.

பல இடங்களிலும் இருந்து கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் 2000 ஏப்ரல் 27ஆம்திகதியன்று நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் பாவனையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான மண்எண்ணெய் ஒதுக்கீடு தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது. அத்தோடு பெற்றோலை பங்கீட்டு முறையில் வழங்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தத்தீர்மானத்தைச் செயற்படுத்தும் பொருட்டு பங்கீட்டு அட்டைகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டு, 7 ஆயிரத்து 500 பங்கீட்டு அட்டைகளும் வழங்கப்பட்டன. இருப்பினும் விநியோகம் சீராக நடைபெறவில்லை.

யாழ். மாவட்டத்திலிருக்கும் 39 எரிபொருள் நிலையங்களின் முன்னாலும் "பெற்றோல் இல்லை"என்று கொட்டை எழுத்துக்களில் அறிவித்தல்கள் போடப்பட்டிருந்தன.!

பின்னர், மெல்ல மெல்ல சில எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் விநியோகம் நடைபெற்றது. அதேபோன்று சில ப.நோ.கூ.சங்கங்களில் பாவனையாளர்களுக்கு 2லீற்றர் வீதமும், விவசாயிகளுக்கு 4லீற்றர் வீதமும் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

மேற்கூறிய வகையான விநியோகத்தின் மூலம் யாழ். மாவட்டத்தின் முழு எரிபொருள் தேவையையும் பூர்த்திசெய்ய முடியாமல் போயிற்று. தொடர்ந்து எரிபொருளுக்குத் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. மக்களும் அவை எங்கு கிடைக்கும் என்று தமக்கிடையே ஆராய்ச்சி செய்து அங்கும் இங்கும் என்று அலைந்து திரிந்தார்கள்.

### பவுஸர்களும் களஞ்சியமும்

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, இதுவரை காலமும் வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பாவனையிலிருந்த "பவுஸர்" களில் சில (13ஆயிரத்து 500லீற்றர் கொள்ளளவு கொண்டவை) படையினரின் பாவனைக்குப் பெறப்பட்டதால் போதியளவு எரிபொருளை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான எரிபொருள் களஞ்சியம் காங்கேசன்துறையில் இருப்பதால் அங்கிருந்து இதுவரைகாலமும் தேவையான எரிபொருள்கள் "பவுஸர்கள்" மூலம் எடுத்து வரப்பட்டன.

இந்தப்"பவுஸர்"கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாலேயே எரிபொருளுக்குத் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் ஏற்பட்டதாக விளக்கம் கூறப்பட்டது.

ஒரு கட்டத்தில், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதனையடுத்து படையினர் பெற்றிருந்த "பவுஸர்கள்" மீண்டும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும் இரு "பவுஸர்"களும் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்பொழுது போதியளவு "பவுஸர்"கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருப்பதால் யாழ்ப்பாணத்துக்கான எரிபொருள் விநியோகம் சீராகும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் சில நாள்களுக்கு முன்னர் கூறினார்.

### செயலகத்திலிருந்து கூட்டுத்தாபனத்துக்கு

இதேவேளை -

யாழ். அரச அதிபரின் கட்டுப்பாட்டிலிருந்த எரிபொருள் விநியோகம் தற்பொழுது வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**கேசரி**

இப்போது, கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் அவசிய தேவைகளுக்கு அனுமதிப் பத்திரம் மூலம் மண்எண்ணெய் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் விவசாயிகள் மற்றும் பாவனையாளர்களுக்கு கட்டுப்பாடின்றி விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. பெற்றோலையும் "பேர்மிட்" இல்லாமலேயே வாகன உரிமையாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு ஒரு மாதத்துக்கு 14 லட்சம் லீற்றர் மண்எண்ணெயும் 11லட்சம் லீற்றர் டீசலும் ஒரு லட்சம் லீற்றருக்கு மேற்பட்ட பெற்றோலும் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும் கடந்தமாதம் குறைந்தளவு எரிபொருளே விநியோகம் செய்யப்பட்டன.

எரிபொருள் தட்டுப்பாடு குறித்து யாழ். நகரிலுள்ள பிரபல எரிபொருள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டோம்.

எமது எரிபொருள் நிலையத்துக்கு மாதாந்தம் 45ஆயிரம் லீற்றர் பெற்றோலும் 60 ஆயிரம் லீற்றர் மண்எண்ணெயும், 75 ஆயிரம் லீற்றர் டீசலும் தேவை. ஆனால் கடந்த மாதத்தில் 15 ஆயிரம் லீற்றர் பெற்றோலும் 15ஆயிரம் லீற்றர் மண்எண்ணெயும் 20 ஆயிரம் லீற்றர் டீசலும் மட்டுமே கிடைத்தன.

இவ்வாறாகவே ஒவ்வொரு எரிபொருள் நிலையங்களுக்கும் தேவைக்குக் குறைந்தளவு எரிபொருள்கள் கூட்டுத்தாபனத்தினால் விநியோகம் செய்யப்பட்டன.

எமது தேவைக்கு ஏற்ப எரிபொருள்களை வழங்கியிருந்தால் மக்கள் எரிபொருள் பெறுவதற்கு கியூவில் நின்று கஷ்டப்படத் தேவையில்லை.

அதிகாரிகளின் அசமந்தப் போக்கே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான காரணம் என்று எரிபொருள் நிலையத்தில் பணிபுரிவோர் தெரிவித்தனர்.

அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்கள் சொன்னார்கள்:

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு நாம் மட்டும் காரணம் அல்லர். எமக்குரிய "பவுஸர்"களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருந்த போதும் இயன்றவரையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் நாம் எரிபொருளை வழங்கினோம்.

### எங்குமில்லாத நடைமுறை

இந்த எரிபொருள்கள் அந்தந்த நிலையங்களில் வைத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகம் செய்யப்பட்டபோது "கியூ"வில் நின்று இவற்றினைப் பெற்றவர்கள் அங்காடி வியாபாரிகள் போன்ற வகையினரே. குறிப்பிட்ட சிலர் இவற்றை வாங்கிப் பதுக்கி வைத்திருப்பதாலேயே மண்எண்ணெய் போன்றவற்றை சாதாரண மக்கள் பெறமுடியாது கஷ்டமுற நேர்ந்தது.

இலங்கையில் எப்பாகத்திலும் இல்லாதவாறு யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள் தவிர்ந்த இடங்களில் எரிபொருள் விற்பனை நடைபெறுகிறது.

**செய்தி மடல்**

இந்தச் சட்டவிரோத விற்பனையாளர்களை தடை செய்தால் எரிபொருள் எல்லோருக்கும் கிடைக்கும். இதனை யாழ். செயலகத்திலுள்ளவர்களால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்தனர்.

காங்கேசன்துறைக் களஞ்சியத்தில் எரிபொருள்கள் தாராளமாக இருப்பதால் அவற்றை 'பவுஸர்'கள் மூலம் எடுத்து வந்து யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு அவற்றின் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்ய இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அடுத்து வரும் சில நாள்களில் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கும் என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போமே! ★

## இடம்பெயர்ந்தோருக்கான ரூ.2 ஆயிரம் இன்னும் இல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை13

இடம்பெயர்ந்த மக்களின் தற்காலிக குடியமர்வுக்கென இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரையும் இந்தப்பணம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

பளைப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த பொழுது அவர்கள் தங்கியிருந்த இடங்களில் வைத்து கிராம உத்தியோகத்தர்களினால் இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.


பதிவு செய்யப்பட்டுப் பல மாதங்கள் கடந்துவிட்ட போதும் இந்த நிதியுதவி தொடர்பாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-5)

### உதயவாக்கு

**தேவை இல்லாதபோது வாயை மூடிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள், சொல்லுவதை தீப்பொறி எழச் சொல்லுங்கள்.**

*- பெஞ்சமின்பிராங்ளின்*

## சாயி சிந்தனை



**மனத்தை உலகத்தின் பக்கம் திருப்பினால் தளையாகின்றது. இருப்பது ஒரு மனம் – அதைத் திருப்புவதனால்தான் வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஒரு கதவுக்குப் பூட்டுப் போடுகின்றோம் – அந்தப் பூட்டை பூட்டுவதற்கும், திறப்பதற்கும் ஒரு சாவியை வைத்துக் கொண்டுள்ளோம். சாவியைப் பூட்டின் துவாரத்தினுள் நுழைத்து இடது பக்கம் திருப்பினால் பூட்டுப் பூட்டிக் கொள்கின்றது. அதே பூட்டு, அதே சாவி, திருப்புவது மட்டுமே வேறு. இதயம் ஒரு பூட்டு – உங்கள் மனம் அதற்குச்சாவி. மனம் என்கின்ற சாவியை இதயம் எனும் பூட்டினுள் நுழைத்து இறைவன் பக்கம் திருப்பினால் மோட்ஷம். உங்கள் பக்கம் திருப்பிக் கொண்டால் மோகம் – ஆகவே மனதைப் புலனின்பங்களில் ஈடுபடுத்தாமல் இயன்றளவு இறைவன் பக்கம் திருப்பி, பிறகு வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.**

*(ஆதாரம்:- சனாதன சாரதி)*

## வாசகர் உள்ளம்

### நீதியின் வீறுநடை

விடியாத அந்த நாற்பத்தைந்து நாள்களை எண்ணிப் பார்க்கின்றேன். வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த உதயனின் சிரிப்பொலி இன்றி நகர்ந்தன நாள்கள். மௌனமாய் உள்ளுக்குள் புழுங்கினோம். சிரம் உணவின்றி குமுறி அழுதது. அன்பின் உறவாய் கைகளில் தவழ்ந்து துன்பத்தில் அகப்பட்ட நமதுஉறவுக்காக மானசீகமாய் பிரார்த்தித்தோம். துயர் எப்பொழுது அகலுமென வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தோம். உடலினில் உதிரம் ஓடுவது போல நம் உதயனின் எழுத்து உரமாகி மனதினில் ஓடுகிறது. காழ்ப்புணர்ச்சிக்காரரால் இதை அழிக்க முடியுமா?

எழுதுகோலுக்கு முன்னால் நீதிக்கு முன்னால் எத்தனை காலம் அநிதி பிழைத்திருக்க முடியும்? பணிந்தது அநீதி. அடாத்துக்காரரின் அட்டூழியங்கள் பொடிப் பொடியாகி அழிந்து போயின. இன்று நீதி வெற்றி பெற்று வீறுநடை போடுகின்றது.

உதயனின் வெற்றிக்கு உழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழரின் விடிவுக்காக உழைக்கும்- குரல் கொடுக்கும் - நீதியை நிலைநிறுத்தும் -உதயனின் பணி சிறந்து வானளாவ முட்டட்டும்.

துணிச்சலான பத்திரிகை என்ற சிறப்பு விருதைப் பெறும் உதயனை மனமார வாழ்த்துகின்றேன். வந்தது காலம், வென்றது நீதி. உதயனின் சேவை திக்கெட்டும் பரவட்டும்.

அ.சூரியன்,
மானிப்பாய.

### கவலை தந்தது

யாழ். மாவட்ட மக்களின் செய்தி ஊடகமான 'உதயன்' சில நாள்கள் வெளிவராமல் இருந்தது. இப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்போருக்கு, வாசகருக்கு இது பெரும் கவலையாகவும் ஒரு செய்தி முடக்கமாகவும் இருந்தது. இந்தக் குறையை நீக்க உதயன் தொடர்ந்து வெளிவருவது; பத்திரிகைத் துறைக்கு பெரிய வெற்றி. தொடர்ந்தும் பல்சுவை அம்சங்களைத் தாங்கி சஞ்சீவியும் வெளிவர வாழ்த்துகின்றேன்.

கண.ஜீவகாருண்யம்,
வ.பி.போ.சபை,கோண்டாவில்.

### தனித்துவம் பேணும் உதயன்

பல வருடங்களாக இடைவிடாது தொடர்ந்து உதயனை வாசித்துவரும் வாசகன் என்ற ரீதியில் உதயன் தனக்கென ஒரு தனித்துவமான பாணியை நெடுநாளாகவே கொண்டு திகழ்வதை அறிந்தவன் நான்.

உப்பிலாப் பண்டம் குப்பையிலே என்பர். அதற்காக உப்பையே கொட்டிச் சமைக்க முடியாது. இந்தவகையில் காலத்தை ஒட்டி பல்சுவை அம்சங்களைத் தந்தாலும் உனது நடுநிலைத் துணிவுக்கு சவால்கள் ஏற்படலாம். அவை கண்டு உதயன் தனது தனித்துவத்தை என்றென்றும் இழந்துவிடாது பேணி நிலைத்து நிற்கவேண்டுமென்பதே எனது ஆவலும் பிரார்த்தனையுமாகும்.

இராம.ஜெயபாலன்,
கொக்குவில்.

### நாளை

ஆனி 30

வெள்ளிக்கிழமை

*திதி:* திரயோதசி
பிற்பகல் 3.53 வரை
*நட்சத்திரம்:* கேட்டை
காலை 7.38 வரை
*சுபநேரம்:* 6.00 - 7.30
*ராகுகாலம்:* 10.30 - 12.00
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சேவை நலன் பாராட்டு விழா 13-07-2000

## அர்ப்பணம் நிறைந்த அதிபர்

சகோதரி மேரி எத்தல்வீவா அவர்கள் தனது 25 வருட ஆசிரிய சேவையில் எம்முடன் எனது கிராமத்தில் கடந்த 10 வருடங்களாக முதலாம் தர அதிபராக சேவையாற்றி 13-07-2000 அன்று ஓய்வு பெறும் இந்த சந்தர்ப்பத்தில் மனமகிழ்வுடன் அவரின் சேவையை மதித்து சில வார்த்தைகள் கூற சந்தர்ப்பம் கிடைத்ததை பெருவிருப்புடன் ஏற்றுக் கொள்கின்றேன்.

அருட் சகோதரியாக 38 வருடங்கள் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்த பெருந்தகை அவர். இதில் கடந்த 25 வருடங்களாக ஆசிரியராக, அதிபராக தனது பணியை செவ்வனே மாணவ சமூகத்தின் நலனுக்காக அர்ப்பணித்து தனது அனுபவம், அறிவு, உயர்பண்பு இவற்றால் அதிபர், ஆசிரியர், மாணவர் மத்தியில் ஒரு நீங்காத இடத்தை தனதாக்கிக் கொண்ட இவர் தமது சேவைக் காலத்தினை முடித்து தன் கடமையில் இருந்து ஓய்வு பெற்றாலும், நீண்ட ஆயுளுடனும், மனமகிழ்வுடனும் இறைபணி செய்து சீரிய வாழ்வு வாழ்ந்திட என் மனமார்ந்த ஆசிகள் உரித்தாகும்.

இ. சிவஞானசுந்தரம்,
உதவிக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்க் கோட்டம்.

## நந்தவனமே நீடு வாழ்க

ஆண்டுகள் பல கல்விப் பணியாற்றிய புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட்செல்வி எத்தல்வீவா அவர்களின் மகத்தான சேவையைப் பாராட்டுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அப்போஸ்தொலிக்க கார்மேல் சபையின் உத்தம துறவியாய் 38 ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்து மகிழ்வதோடு சமுதாய வளர்ச்சியையும் குறிக் கோளாய் ஏற்று கல்விச் சேவையின் 25 ஆண்டுகள் பூர்த்தி செய்த பெருமையின் தியாகப் பிறவி இவர்.

அன்பின் விளைநிலம் இவர். இன்சொல்லின் கரும்பு, அரவணைப்பின் தாய், கருணையின் ஊற்று, ஆளுமையின் தராசு, பண்புகளின் கருவூலம், ஆசிரியர், மாணவர்களின் முன்மாதிரிகைச் சொத்து. கல்லூரியின் வளர்ச்சியில் முற்றாகத் தியாகம் செய்த முதல்வி. வித்தயாலயச் சுற்றாடலில் அழகிய நந்தவனமே அவரது புனித வாழ்வின் பொக்கிஷமாக மிளிர்கின்றது. தப் சொந்த மண்ணிலே சேவைபுரிந்து இளைப்பாறும் எம் அருட் சகோதரியை இறை ஆசியும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ இதயங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

அருட்செல்வி ஜெறோம்
கார்மேல் மடத்து தலைவி, யாழ்ப்பாணம்.

## தன்னிகரில்லாத் தலைவியே நீடுவாழ்க

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி அதிபர் எத்தல்வீவா அவர்கள் கல்வி உலகில் அரும்பணியாற்றிய தன்னிகரில்லாத் தலைவியாகத் திகழ்பவர். இவர் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று 10 ஆண்டுகள் சீரிய பணியை ஆற்றியவர். இப் பாடசாலையை வளமுடன் மேம்படுத்திய பெருமை அருட்சகோதரியையே சாரும். தான் பெற்ற விஞ்ஞான அறிவின் வளர்ச்சியால் கல்லூரியின் சூழலையே மெருகூட்டி நின்றார்.

இத்தகைய மனித நேயம் மிக்க அருட்சகோதரி நீண்ட ஆயுள் பெற்று மேலும் பொதுப்பணி தொடர வாழ்த்தி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



அருட்செல்வி
எத்தல்வீவா
அவர்கள்

**சேவை விபரம்**

★ தி/சென் மேரிஸ் கல்லூரி
19.11.1975 – 14.02.1982

★ க.மு/கார்மேல் பற்றிமா கல்லூரி
15.02.1982 – 14.02.1985

★ கொ/சென்ஆன்ஸ் வித்தியாலயம்
15.02.1985 – 04.03.1990

★ யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
05.03.1990 – 12.07.2000

(76373)

## ஆசிச் செய்தி

அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் அருட்சகோதரி எத்தல்வீவா எமது அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்குச் சபையின் உ[illegible] தலைவராயிருந்து அரும்பணி புரிந்ததோடு, பங்கு மக்களின் இ[illegible] துன்பங்களில் இரண்டறக்கலந்து பங்கின் வளர்ச்சியில் சேவை[illegible]த சிறந்த சேவகியாகத் திகழ்ந்தார்.

புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் பத்து வருடங்க[illegible] அதிபர் பொறுப்பை ஏற்று பல இடம்பெயர்வுகளை சந்தித்த போதும், சளைக்காது பாடசாலையின் தனித்துவத்தைப் பேணிக்காத்து, நல்ல முறையில் திறம்பட நிர்வகித்து, நடத்திய துணிச்சல் மிக்க அதிபர். தனது குழந்தை உள்ளம் கொண்ட பேச்சினாலும், முகம் மலர்ந்த சிரிப்பினாலும் ஆசிரியர்களையும், மாணவர்களையும், பெற்றோர், பெரியோர்களையும் தன்பால் கவர்ந்ததில் வியப்பில்லை. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும், இவர் பணிசிறக்க, இறைஆசி வேண்டி எமது பங்குச் சபையின் சார்பில் வாழ்த்தி நிற்கின்றோம்.

பங்கு மேய்ப்புப் பணிச்சபை,
அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயம்.

## இறைபற்று மிக்க சேவகி

கல்வியின் மாண்பும், கனிவுள்ளமும், கடமையுணர்வும், கடவுள் நம்பிக்கையும் ஒருங்கிணையப் பெற்றவர் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சார்ந்த அருட்சகோதரி எத்தல்வீவா அவர்கள். இவர் தனது அறுபதாவது அகவையில், கால் நூற்றாண்டுக் கல்விச் சேவையில் ஒரு தசாப்த காலம் அதிபர் சேவையை அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் பூர்த்தி செய்துள்ளார். இவர் தனது அதிபர் பணிக்காலத்தில் பல இன்னல்கள், இடையூறுகள் மத்தியிலும் மனம் தளராது பணியாற்றி பாடசாலையின் தனித்தன்மையைப் பேணி ஆசிரியர், மாணவர், பெற்றோர், அதிகாரிகள் மன[illegible] நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

இவர் எம[illegible] மறைமாவட்டத்துக்கும் மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற இறையருள் வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன.

அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ் ஆயர்.

## ஆழமும் அமைதியும் நிறைந்த சேவை

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அதிபராகக் கடந்த பத்து வருடங்கள் அரிய பணியாற்றி ஓய்வு பெறுகிறார் அருட்சகோதரி எத்தல்வீவா. இவர் தாழ்மை, ஏழ்மை, பொறுமை, எளிமை போன்ற பல நற்பண்புகளாலும், அருள் ஞானத்தினாலும் மற்றவர்களினால் கவரப்பட்டவர்.

இன்னல்கள், இடப்பெயர்வுகள் மற்றும் போர்க்காலப் பாதிப்புக்கள் மத்தியிலும் தமது பொறுப்புக்களை மிகச் சீராகச் செய்தவர். மாணவரின் நலனையே முக்கிய கருத்தாகவும், துறவற வாழ்வின் வெளிப்பாடாகவும் எடுத்துக் காட்டியவர். கார்மேல் கன்னியர் சபையின் சிறந்ததொரு துறவியாக அனைவரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மணிவிழாக் காணும் இந் நன்நாளிலே அன்னாரின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துக்கள் கூறி இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அவர் சேவை நீடிக்க இறைஆசி வேண்டி நிற்கின்றேன்.

அருட்தந்தை ஜே. பி. இ. செல்வராஜா,
யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# சகல கட்சிகளின் ஆதரவும் இல்லையேல் தீர்வுத் திட்டத்தினால் பயன் இல்லை

## தெற்குக் கல்விமான்களும் புத்திஜீவிகளும் கருத்து

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.க.வும் உடன்பாடு எட்டிய போதும் - தெற்கில் உள்ள சகல கட்சிகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படாது விட்டால் எந்தவித பயனும் கிடைக்கப் போவதில்லை.

தெற்கில் உள்ள புத்திஜீவிகளும், கல்விமான்களும் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமாதானத்துக்கான அமைப்புக்களில் முக்கிய பங்கு வகிக்கும் ஜெகன் பெரேரா, பேராசிரியர், திஸ்ஸவிதான உட்பட பல கல்விமான்களும், புத்திஜீவிகளுமே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நல்ல அறிகுறி ஆகும்.

தெற்கில் உள்ள ஏனைய கட்சிகளும் இந்த வகையான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இல்லையேல் அவை தீர்வுக்கான முயற்சியை குழப்பும்.

பிரதான கட்சிகளுக்குள் இணக்கப்பாடு ஏற்பட்டும் அதனால் பயன் கிடைக்கபோவதில்லை -

இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

# வெப்பம் காரணமாக நோய்கள் பரவுகின்றன

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ். குடாநாட்டில் வெப்பம் மிகுதியால் சின்னமுத்து, கொப்புளிப்பான் போன்ற நோய்கள் பரவி வருகின்றன என்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து தெரியவருகின்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மாத்திரம் சுமார் 20க்கும் மேற்பட்டோர் இந்த நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இடங்களிலும் இந்த நோய்கள் பரவிவருவதாக அறியப்படுகிறது. அதேசமயம் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட மேலும் ஒரு குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ-139-15)

## புதிய முகவரியை பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை13

அண்மைக்கால அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் புதிய முகவரியை யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

அத்துடன் செலுத்தப்பட வேண்டிய மரணசகாயம், பரிசூதியம், கடன்கள் போன்வற்றைத் தவணை தவறாது சமாசத்திலோ அல்லது கிராமிய வங்கியின் கணக்கிலோ செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9-8)

# திட்டமிட்டபடி 31ஆம் திகதி ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை

## அனுமதி அட்டைகள் தபாலில்

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையை திட்டமிட்டபடி எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக பரீட்சைத் திணைக்களத்தில் கடந்த திங்களன்று இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அரசசார்பற்ற அமைப்புக்களின் உதவியுடன் வினாத்தாள்களை எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

அதே சமயம் - பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான அரசாங்கசேவை ஓய்வு பெற்றோர்சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(இ-7)

# களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் பொலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் குறித்து விசாரணை நடத்துக!

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூலை13

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்குள் புகுந்த பொலீஸார் அங்கு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் நோயாளர்கள் பீதியடைந்துள்ளனர். எனவே இது விடயமாக விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசா மேற்கண்டவாறு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

களுவாஞ்சிக்குடியில் திங்களன்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்துப் பொலீஸார் ஆஸ்பத்திரியில் நுழைந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். அதனால் நோயாளிகள் பீதியடைந்தனர். அங்கிருந்த அம்புலன்ஸ் ஒன்றும் சேதத்துக்குள்ளானது.

இப்படியான சம்பவம் இனி மேல் இடம்பெற அனுமதிக்கக் கூடாது - என்றுள்ளது.

(இ-21-3)

# நேர்முகப் பரீட்சை நடத்தப் பணிப்பு

திருகோணமலை,ஜூலை13

ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைகளை உடன் நடத்துமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் இது தொடர்பான பணிப்புரையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியல்களின்படி நேர்முகப்பரீட்சைகளை உடன் ஆரம்பிக்கும்படியும் -

ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் விவரம் அடங்கிய பட்டியல் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் அனுப்பப்படும் என்றும் - செயலாளர் பணிப்புரையில் தெரிவித்துள்ளார்.

(இ-3)

# குமுதினிப் படகைத் திருத்துவதற்கு கொழும்பிலிருந்து உதிரிப்பாகம்

காரைநகர்,ஜூலை13

ஊர்காவற்றுறை - நெடுந்தீவு படகுச் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினிப் படகைத் திருத்துவதற்கான உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் படகைத் திருத்தும் பணிகள் பூர்த்தியடைந்ததும் இந்தப் படகு சேவையில் ஈடுபடுத்தப்படும் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக குமுதினிப் படகு பழுதடைந்திருப்பதால் ஊர்காவற்றுறைக்கும், நெடுந்தீவுக்குமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.


(இ-73)



( ) ( ) ( ) ( )



( ) ( ) ( ) ( )



( ) ( ) ( ) ( )

பகுதி I நேரம்:- 1மணி15 நிமி.

ந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்க ள்.

*ான் போலத் துள்ளி ஓடிவந்த பன்னிரண்டு பக். காற்றாய்ப் பறந்துவந்த மோட்டார் மோதியது. அவள் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். பாதசாரிகளில் சிலர் மோட்டார் ரைத் தாறுமாறாகப் பேசினர். தந்தையை தாய் தன் ஒரேயொரு மகளைக் காணத் க ஓடிவந்தாள்; செய்வதறியாது திகைத் அவ்வழியாக வந்த செஞ்சிலுவைச் சங்க குக் கைகொடுத்தது. அதிலிருந்தவர்கள் யயும் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு*

செயல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
தி ஒழுங்கு தொரியாதவள், மனநோயாளி)
ன் குடும்ப உறுப்பினர்கள்.
நால்வர்)
ன் தாய்
, சுமங்கலி)
சங்கம்
ம், அரச நிறுவனம், தொண்டர் நிறுவனம்)
தல் என்றால்,
தல், பறந்து செல்லுதல், விரைந்து

க் கிடத்தல் என்றால்
மயங்கிக் கிடத்தல், நித்திரை செய்தல்)
பசுதல் என்றால்
பேசுதல், இனிமையாய்ப் பேசுதல்,
பேசுதல்)
ம் என்பதன் மூலம் உணர்வது
இன்பம்)
என்றால்
தல், உதவி செய்தல், தூக்கிச்செல்லுதல்)
வமைத்தொடர் எதுு?
..............................................................
றிற்குரிய ஒத்த கருத்துச் சொல் ஒவ்
.
............. II பாதசாரி - ..............
............. IV ஓட்டுநர் - ..............
வழியாக வந்த செஞ்சிலுவை சங்க
கொடுத்தது.' இவ்வாக்கியத்தின்
..............................................
..............................................
பயர் அடைமொழி ஒன்றும் வினை
றும் தருக
மொழி ..................................
மொழி ..................................
களைப் பிரித்து எழுதுக
..............................................
..............................................
ன் குறியீட்டினைத் தருக
..................................

**கழ்வுடனும் தொடர்புடைய பழமொழிகளைத் கீழ் கோடிடுக.**

லே மூழ்கிய கந்கனின் வீட்டுப் பொருட்

ம் முன்னே அணை கோல வேண்டும்.
விழுந்தவனை மாடுமுட்டியது போல.
ானால் இறக்கமும் உண்டு.
ட்ச ரூபா செலவு செய்து தார் வீதிய
டொன்றைக் கட்டினான். எனினும் அவச
மாக்கப்பட்டதனால் முழு வீட்டையும்
நேர்ந்தது.

படும். கெட்ட குடியே கெடும்.
ற்ற கோலம்.
த்திற்கு மிகஅழகாகப் பெயின்ட் பூசப்
தன் என்ஜின் பழுதடைந்திருந்தது.

I நெருப்பில்லாமல் புகையாது.
II கழுதை அறியுமா கற்பூர வாசனை?
III மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

**★ பின்வரும் கடிதத்திற்கமையக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

இலக்கம் 17, கண்டிவீதி
வவுனியா

*அன்புள்ள சிவா*

*உமக்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்கள் யாவும் என்னிடம் உள்ளன அப்புத்தகங்களை கொண்டு செல்வதற்கு எப்போது வருவீா் வரும்போது எனக்கு தமிழ் கணிதம் விஞ்ஞானம் ஆகிய புத்தகங்களை கமலிடம் வாங்கிவரவும்*

*இங்ஙனம்*
*அன்புள்ள*
*சுமன்*

19. மேலேயுள்ள கடிதத்தில் நிறுத்தற் குறியீடுகள் எவையும் இடப்படவில்லை. அக்கடிதத்தில் தேவையான இடங்களில் நிறுத்தல் குறியீடுகளை இடுக.
20. இக்கடிதம் யாரால்? யாருக்கு எழுதப்பட்டது?
..............................................................
21. நிறுத்தற் குறியீடுகளைத் தவிர, இக்கடிதத்தில் இன்னும் முக்கியமானதொரு குறை உள்ளது. அது என்ன?
..............................................................
22. ஒரு கடிதத்தைப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்காக ஒட்டப்படவேண்டிய முத்திரைகளின் பெறுமதியாது?
..............................................................
23. ஒரு கடிதத்தைச் சாதாரண தபாலில் அனுப்புவதற்காக ஒட்டப்படவேண்டிய முத்திரைகளின் பெறுமதி யாது?
..............................................................
24. சுமன் தபால் அலுவலகத்திற்குச் சென்று ரூபா 3.50 இன் முத்திரைகள் 4 ஐயும், ரூபா 5.00 இன் முத்திரைகள் 13 ஐயும், ரூபா 10.00 இன் முத்திரைகள் 14 ஐயும் வாங்கினான். அவன் தபால் அலுவலகத்தில் செலுத்திய பணம் ரூபா 500 ஆகும் அவனுக்குக் கிடைத்த மீதி யாது?..............................................................

**★ பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக**

25. தபால் அலுவலகம் ..........................................
26. முத்திரை ..........................................
27. கடிதம் ..........................................
28. முகவரி ..........................................

**★ இவ்வரைபடம் ஒரு மொத்த விற்பனைக் கடையில் விற்பனைக்குள்ள பொருட்களின் பங்கினைக் குறித்துக் காட்டுகின்றது. இதனை நன்றாக அவதானித்து விளங்கி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**





(29) இக்கடையில் 75 மூடைகள் அரிசி உள்ளதாயின் கடையிலுள்ள அனைத்துப் பொருட்களும் எத்தனை மூடைகள் ஆகும்?..............................................................
(30) இக்கடையில் காணப்படும் பருப்பு மூடைகளின் எண்ணிக்கை யாது?..............................................................
(31) எந்த இரு பொருட்களைச் சேர்த்தால் அரிசிக்குச் சமனாகும்?..............................................................
(32) சமமான அளவில் காணப்படும் இரு பொருட்களும் எவை?..............................................................
(33) அவை இரண்டும் சேர்ந்து முழுப் பொருட்களின் என்ன பங்கு என்பதைப் பின்னத்தில் எழுதுக..............................

**★ நாதன் கடையில் வாங்கிய பொருட்களின் விவரம் கீழே உள்ளது. அவ்விபரத்தைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| மா | 3Kg | 63.00 |
| அரிசி | 21/2Kg | 75.00 |
| சீனி | 750g | 22.50 |
| பருப்பு | 500g | 25.50 |

(34) ஒரு கிலோ அரிசியின் விலை யாது?..............................
(35) சீனி 11/2 கிலோவும் பருப்பு 750g உம் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?..............................
(36) நாதன் மேலேயுள்ள அட்டவணையில் உள்ள பொருட்களையும் வாங்கிக்கொண்டு 200 ரூபா தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதி எவ்வளவு கிடைக்கும்?..............................
(37) 100g பருப்பின் விலை என்ன?..............................
(38) 2கிலோ அரிசியும் 150g சீனியும் 250g பருப்பும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?..............................


**★ A, B, C, D, E, எனும் ஐந்து நகரங்களுக்கிடையிலான தூரங்களை விளக்கும் வரிகோட்டுப் படம் இது.**




வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(39) அருகருகே உள்ள இரு நகரங்கள் எவை?..................
(40) அதிக தூரத்தில் உள்ள இரு நகரங்கள் எவை?........
(41) Cயிலிருந்து Eயை அடைய Dயூடாகச் செல்வதா, அல்லது B,Aயூடாகச் செல்வதாக இலகுவானது?
..............................................................
(42) இடைத் தூரங்களைக் கருத்தில் கொண்டு தூரங்களைக் குறிக்கும் எழுத்துக்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக. ..............................

**★ ஐந்தாம் ஆண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட பரிசோதனை ஒன்று அருகில் தரப்பட்டுள்ளது.**




(43) தரப்பட்ட அமைப்பில் A-F வரையான பகுதிகளை குறிக்குக

A - .......................... D -..........................
B - .......................... E -..........................
C -.......................... F -..........................

(44) சிறிய குப்பியில் சிவப்பு நிறமூட்டிய நீர் எழுந்தமைக்கான காரணம்? ..............................
(45) இன் நிறமூட்டிய நீரைக் கொண்ட குப்பியை சுடு நீரைக் கொண்ட முகவையினுள் வைத்தபோது எதனை அவதானிப்பீா்?..............................
..............................................................
(46) இப்பரிசோதனையில் இருந்து என்ன முடிவிற்கு வருவீா்?..............................
(47) வெப்பவிரிவைப் பயன்படுத்தும் சந்தா்ப்பங்கள் 2 தருக?..............................
..............................................................

**★ அச்சுப் பதித்தலின் 4 சந்தர்ப்பங்கள் கீழே உள்ளன. எனினும் அவை சரியான ஒழுங்கில் இல்லை அவை ஒழுங்காக இருப்பதற்கு எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் 1, 2, 3, 4, ஆகிய எண்களை இடுக.**

(48) செய்த அச்சில் சாயம் இட்டு வெள்ளைக் கடதாசி மீது வைத்து அழுத்துக. ( )
(49) மென் பலகைத் துண்டை எடுக்கவும். ( )
(50) தட்டையான மேற்பரப்பிலே அச்சு ஒன்றை வெட்டுக. ( )
(51) அதன் ஒரு பக்கத்தில் தட்டையான மேற்பரப்பைச் செய்க. ( )

A,B,C,D,E,F,G,H,I,J,K,L,M,N,O,P,Q,R,S,T,U,V,W,X,Y,Z.

(52) இவ் ஆங்கில அகர வரிசை எழுத்தொழுங்கில் H இற்கும் R இற்கும் சரி நடுவில் வரும் எழுத்து.
(53) H இலிருந்து ஐந்தாவதாக வலது புறமாக வரும் எழுத்து எது? ..............................
(54) O விலிந்து நான்காவதாக இடது புறமாக வரும் எழுத்து எது? ..............................
(55) ஆங்கில அகர வரிசை ஒழுங்கில் H எத்தனையாவது எழுத்து? ..............................
(56) இறுதியிலிருந்து 12ஆவது எழுத்து எது?.............

**★நிரையாகவும், நிரலாகவும், குறுக்காவும், எப்பக்கத்தாலும் நேராக மூன்று இலக்கங்களைக் கூட்டினால் ஒரே எண் விடையாக வரக்கூடியவாறு வெற்றிடங்களை நிரப்புக.**

(57)

| | | |
|---|---|---|
| | 9 | |
| 3 | 5 | 7 |
| | 1 | |

(58)

| | | |
|---|---|---|
| 5 | | 3 |
| | 6 | 8 |
| 9 | | |

(59)

| | | |
|---|---|---|
| 7 | | 5 |
| 6 | | |
| 11 | | 9 |

(60)

| | | |
|---|---|---|
| 6 | | 4 |
| | 7 | 9 |
| 10 | 3 | |

**★ நான் சென்ற சுற்றுலா பற்றி ஏழு வாக்கியங்கள் எழுதுக.**

..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................


# புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2000

## வினாத்தாள் இல. 3


**தரம் 5** **பகுதி I** **நேரம்:- 45 நிமி.**


★ **வெற்றிடமாக விடப்பட்டுள்ள இடங்களுக்குப் பொருத்தமான எண்ணைக் கண்டு அதற்குரிய எண்ணை எழுதுக**

1.




2




★ **பின்வரும் பாடலை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

*பாடசாலை பாடசாலை*
*அறிவு மலர் பூக்கும் சோலை*
*பாலர் நாங்கள் கூடி யாடி*
*பண்புடனே பழகும் சோலை.*

4. இங்கு அறிவுமலர் பூக்கும் சோலை எது?

.......................................................................................

5. இச்சோலையில் எப்படிப் பழகுகிறோம்?

.......................................................................................

6. யார் இங்கே கூடியாடுகிறார்கள்?

.......................................................................................

★ **கீழே தரப்பட்ட சொற்களில் மூன்று சொற்கள் ஏதோ ஒரு வகையில் பொருந்தக்கூடியதாகவும் மற்றொன்று வித்தியாசமானதாகவும் உள்ளன. வித்தியாசமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**

7. பற்று, வெறுப்பு, நேசம், பாசம்.
8. வீடு, கோயில், படித்தான், பாடசாலை.
9. நான், நாம், நாங்கள், நீங்கள்.
10. லண்டன், கண்டி, காலி, கொழும்பு.


★ **தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 11. கண்டி | வட மாகாணம் |
| 12. காலி | மேல் மாகாணம் |
| 13 கொழும்பு | கிழக்கு மாகாணம் |
| 14. திருகோணமலை | தென் மாகாணம் |
| 15. யாழ்ப்பாணம் | மத்திய மாகாணம் |

★ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

16. துத்திரி என்ற தாவரம் மாட்டினால் பரப்பப்படுகிறது. [ ]
17. ஒரு துணியின் ஓரத்தை மடித்துத் தைப்பதற்கு சங்கிலித் தையல் பயன்படுகிறது. [ ]
18. வயலின் ஒரு தோற்கருவி ஆகும். [ ]
19. மின்மினிப் பூச்சி கண்டல் செடியிலுள்ள இலையை உணவாக உட்கொள்கிறது. [ ]
20. வயல் சேனைகளில் குருவிகளை விரட்ட காற்றாடி, வெருளி போன்றன பயன்படுகின்றன. [ ]

★ **(21 - 29) பின்வரும் கூட்டிலுள்ள வெற்றுச் சதுரங்களிலே பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுக. (சொற்களை ஆக்க கீழே தரப்பட்ட விளக்கக்குறிப்புகளைப் பயன் படுத்துக.)**




| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. உயர்கல்வி கற்கும் இடம்<br>2. வரையப்பட்ட ____ அழகாய் இருந்தது.<br>3. பாடம் படிக்க உதவுகிறது.<br>4. மிருகங்களில் ஒன்று | 4. கோயிலில் கச்சான், ____ வாங்கினேன்.<br>5. பெருநிலப்பரப்பு<br>6. புத்திரி<br>7. நேரம் காட்டுவது.<br>8. ஓர் உடலுறுப்பு |

★ **தரப்பட்ட தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலப் பதத்தை எழுதுக.**

30. சந்தை .......................................................................
31. பாடசாலை ................................................................
32. வீதி .........................................................................
33. கோவில் ....................................................................

★ **ஒரு வகுப்பின் நேர சூசிகைப்படி பாடங்கள் ஒழுங்கமைந்த விதம் கீழே தரப்படுகின்றது.**

| | | |
|---|---|---|
| திங்கள் | - | கணிதம், தமிழ், விஞ்ஞானம். |
| செவ்வாய் | - | ஆங்கிலம், சுற்றாடல், சித்திரம். |
| புதன் | - | விஞ்ஞானம், ஆக்கத்திறன், ஆங்கிலம். |
| வியாழன் | - | தமிழ், சுற்றாடல், விஞ்ஞானம். |
| வெள்ளி | - | விஞ்ஞானம், தமிழ், சித்திரம். |

**சரியான விடையின்கீழ் கீறிடுக.**

34. ஐந்து தினங்களும் நடைபெற்ற ஒரே பாடம்.
(I) தமிழ் (II) கணிதம் (III) ஆங்கிலம்
(IV) விஞ்ஞானம் (V) ஒன்றுமில்லை

35. மூன்று தினங்கள் நடைபெற்ற பாடம்.
(I) தமிழ் (II) கணிதம் (III) ஆங்கிலம்
(IV) விஞ்ஞானம் (V) ஒன்றுமில்லை

36. நான்கு தினங்கள் நடைபெற்ற ஒரே பாடம்.
(I) தமிழ் (II) கணிதம் (III) ஆங்கிலம்
(IV) விஞ்ஞானம் (V) ஒன்றுமில்லை

37. இரண்டு தினங்கள் நடைபெற்ற ஒரே பாடம்.
(I) தமிழ் (II) கணிதம் (III) ஆங்கிலம்
(IV) விஞ்ஞானம் (V) ஒன்றுமில்லை

38. ஒரு தினம் மட்டும் நடைபெற்ற ஒரே பாடம்.
(I) சுற்றாடல் (II) சித்திரம் (III) ஆங்கிலம்
(IV) தமிழ் (V) கணிதம்

39. ஓர் எழுத்துக் கூட்டத்தைக் கண்ணாடி(தளவாடி)யில் பார்க்கும்போது எழுத்துக்கள் அப்படியே தோன்றுவது இவற்றில் :-
(I) MADE (II) HOW (III) WHEN
(IV) ATA (V) DOG


40. "அப்போது இரவு 11மணி இருக்கும். யாரோ வாசல்கதவை ஆவேசமாகத் தட்டும் சத்தம் கேட்கிறது. நான் கதவைத் திறக்கின்றேன். வெளியே................" இக்கூற்றில் வெளிப்படும் உணர்வு யாது?
(I) அச்சம் (II) வீரம் (III) கோபம் (IV) சிரிப்பு.

41. "விபத்தில் சிக்கிய சிறுவனின் தலையிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவன் 'ஐயோ! அம்மா' என்று எழுப்பிய கூக்குரல் அனைவரது பார்வையையும் அவன் பக்கம் திருப்பியது. வேதனை தாங்கமுடியாது அவன் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தான்" இக்கூற்றில் இருப்பது
(I) இரக்கம் (II) ஆத்திரம் (III) கோபம் (IV) வெகுளி

★ **கீழே தரப்பட்டுள்ள பெயர்களை நான்கு மாணவர்கள் குறியீட்டு முறையைக் கருத்தில் கொண்டு குறித்துக் காட்டினார்கள். ஆயினும் நால்வரில் ஒருவர் மட்டுமே சரியாகக் குறித்துக் காட்டினார். அதனைக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக.**

42. கனகநாயகம்

(I)
(II)
(III)
(IV)




43. மன்மதராமன்

(I) MWELKMN (II) MNMLKMN


(III) WMMLKKM (IV) MMWLKMN

★ **ஈரெழுத்துச் சொல் ஒன்றைக் கூட்டுக்குள் சேர்க்கும்போது பல சொற்களை உருவாக்கமுடியும். அந்த ஈரெழுத்துச் சொல்லை எழுதுக.**

44.





45. பின்வரும் ஆக்கச் செயற்பாடுகள் செய்யும் படிமுறை ஒழுங்குமாறி அமைந்துள்ளது அதனை ஒழுங்குபடுத்தும் சரியான முறையை தெரிவு செய்க.




[2, 1, 3, 4, 5] [5, 3, 4, 2, 1] [2, 5, 4, 1, 3]


46.




[1, 2, 3, 4] [4, 3, 2, 1] [3, 2, 1, 4]

★ **பின்வரும் படங்களிற் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டுவதற்கு அவற்றின் கீழ் 1, 2, 3, 4, 5, ஆகிய எண்களை எழுதுக.**

47.



( ) ( ) ( ) ( ) ( )


**தயாரிப்பு :- யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் குழு**

48




( ) ( ) ( )

49



( ) ( ) ( )

50



( ) ( ) ( )

**பகுதி I**

★ **பின்வரும் உரைப்பகுதியைாசித்து அ... ளுக்கு விடை காணுங்கள்.**

*வீதிவழியே மான் பேத் துள்... வயதுச் சிறுமியைக் ... சைக்கிள் ஒன்று மோதிய அவள் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தா. பாதசா... சைக்கிள் ஓட்டுநரைத் தமாறாகட... இழந்த சிறுமியின் தாய் ... ஒரேபெ... தலைவிரிகோலமாக ஓடி... தாள்; ... தாள். அப்போது அவ்வழாக வந்த... வாகனம் அவளுக்குக் கொடுத்த... சிறுமியையும் தாயையும் ...றிக்கொல... விரைந்தனர்.*

1. இச்சிறுமியின் செயல் ...றி என்... (அவசரக்காரி, வீதி ஒழுங் தொரிய...
2. இந்தச் சிறுமியின் குடு உறுப்... (இருவர், மூவர், நால்...
3. இந்தச் சிறுமியின் தா... (கன்னி, விதவை, சுமங்லி)
4. செஞ்சிலுவைச் சங்கம் ... (தனியார் நிறுவனம், அறநிறுவனம்...
5. காற்றாய்ப் பறத்தல் என்றால் ... (மிதந்து செல்லுதல், ...ந்து செல்... செல்லுதல்)
6. மூச்சுப்பேச்சின்றிக் கிடதல் என்... (இறந்துபோதல், மயங்க கிடத்த...
7. தாறுமாறாய்ப் பேசுதல் ...ன்றால் ... (வாயில் வந்தபடி பேசல், இனி... அமைதியாய்ப் பேசுத...
8. தலைவிரி கோலம் என்தன் மூல... (அழகு, சோகம், இன்ப...
9. கைகொடுத்தல் என்றா... (இலஞ்சம் கொடுத்தல், உவி செய்த...
10. இதில் வந்த உவமைத்தொடர் ...

.......................................

11. பின்வருவனவற்றிற்குரி ஒத்த க... வொன்று கூறுக.
I இரத்தல் - ............ II பாத...
III மூர்ச்சை - ............ IV ஓட்...
12. 'அப்போது அவ்வழியா வந்த ... வாகனம் கைகொடுத்து.' இவ்வ...
I எழுவாய் ..................
II பயநிலை ..................
13. இதில் வரும் பெயர் அடைமொழ... அடைமொழி ஒன்றும் தக...
I பெயர் அடைமொழி ..................
II வினை அடைமொழி ..................
14. பின்வரும் சொற்களை பிரித்து ...
I பன்னிரண்டு ..................
II மூச்சுப்பேச்சு ..................
15. செஞ்சிலுவையின் குறீட்டினைத...

.......................................

★ **பின்வரும் ஒவ்வொரு நிகழ்வுடன் தொடர்... தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16. வெள்ளப்பெருக்கில் மூழ்கிய ...ந்... களை திருடினர்.
I வெள்ளம் வரும் முன்ன அணை...
II மரத்திலிருந்து விழுந்தவனை ...
III ஏற்றம் உண்டானால் இறக்கமு...
17. மகேஷ் பல இலட்ச ...பா செல... ருகே அழகிய வீடொன்றைக் கட்டி... ரமாக வீதி அகலமாக்கப்பட்டதன... உடைத்துப் போட நேர்ந்தது.
I பாயுமுன் சிந்தி.
II பட்ட காலிலே படும் கெட்ட கு...
III காலத்திற்கு ஏற்ற கோலம்.
18. நசீருடைய வாகனத்திற்கு மிக அழ... பட்டிருந்தாலும் அதன் எஞ்சின் ப...

# மக்கள் குறையை வெளிப்படுத்துவது தொண்டர் நிறுவனங்களின் கடமை

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பது தொண்டர் நிறுவனங்களின் கடமை. ஆகவே தனிப்பட்ட ரீதியில் எவர் மீதும் நாம் குற்றஞ் சாட்டுவதாக எவரும் கருதக் கூடாது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகம் திருப்திகரமாக இடம்பெறவில்லை என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது ஜூன் மாத நிலைவர அறிக்கையில் தெரிவித்திருந்ததும் —

அது குறித்து யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றஉணவு — எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டத்தில் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்ததும் — தெரிந்தவையே.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே இணையம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்க அதிபர் மக்களுக்கு புரியும்சேவையின் தாக்கம் பற்றிய பின் ஊட்டலாக எங்கள் அறிக்கைகளைக்கருதினால்,அரச அதிபர்சேவையை மேம்படுத்தவும் மக்கள் நலனைப் பேணவும் பேருதவியாக இருக்கும். அரச நிறுவனங்கள், இரகசியங்களைப் பேணுவது அவர்களுடைய பாரம்பரியம். அதன் மூலமாக மக்கள் படும் அவலங்களை மறைப்பதற்கு வசதியாக உள்ளது.

தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒளிவு மறைவின்றி இருப்பதனால் (Transparent) அவர்கள் கண்ணாடி வீடுகளில் இருப்பதாக கருதலாம். பொதுமக்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் இன்றைய அவசரகால சட்ட விதிகளின் கீழ் எந்தவித எதிர்ப்புக்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்த முடியாத நிலையிலிருக்கின்றனர்.

### நிதித் தடைக்கு யார் காரணம்?

யாழ். குடாநாட்டு மக்கள் 1996 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த பின்னர் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வருவது தடை செய்யப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை எதுவித வெளிநாட்டு நன்கொடைகளையும் நாம் பெறவில்லை. இத்தடையை நீக்கி எமது நிதி வளத்தைப் பெரிதாக்கி நாம் மக்களுக்குத் தொண்டு புரிவதற்கு அரச அதிபர் என்ன முயற்சிகள் எடுத்தார்? என்பதைத் தெரிவித்தால் நிலைமையைத் தெளிவு படுத்தும்.

1996 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு மட்டங்களுடன் தொடர்புகொண்டு தடையை நீக்கி திட்டங்களின் பங்காளிகளாகச் சேர்ந்து சேவை புரிவதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டிருந்தோம். இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. எமக்கான நிதித் தடைக்கு யார் காரணம் என்பதை நாம் அறிவோம். நிதிவற்றிய நிலையிலும் எமது தொண்டர்களின் அர்ப்பணிப்பினால் எம்மால் இயன்ற சேவையைப் புரிந்து வருகின்றோம்.

கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி அரசாங்க அதிபருடன் எமது பிரதிநிதிகள் உரையாடிய பொழுது எங்களால் செய்யக்கூடிய பங்களிப்பைத் தெரிவித்திருந்தும் நிவாரண வேலையில் பங்கு கொள்ள எமது நிறுவனங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இது மட்டுமல்ல; வாரந் தோறும் நடைபெறும் நிவாரண விநியோகம் தொடர்பான கூட்டங்களுக்கு எமது நிறுவனங்கள் அழைக்கப்படுவதுமில்லை.

1990—1996 வரை பாரிய இடம்பெயர்வுகள் நடைபெற்றபொழுது எமது நிறுவனங்கள் ஆற்றிய பணியை அரச அதிபர் முன்னைய அரச அதிபர்கள் உட்பட எமது மக்களும் நன்கு அறிவார்கள்.

கடந்த 9 ஆம் திகதி உதயனில் வெளியான யாழ். செயலக கூட்டச் செய்திக்கான இணையத்தின் விளக்கம் வருமாறு:-

### தரமற்ற அரிசி

எமது தொண்டர்கள் இடம்பெயர்ந்த குடும்பங்களை முகாம்களிலும் வீடுகளிலும் சென்று பார்வையிட்ட பொழுது நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட அரிசி குறித்து அவர்களிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது

தரமற்ற அரிசி சில சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டதை அவதானிக்கமுடிந்தது

துர்நாற்றமுடைய அரிசி, கழிவுடன் கூடிய குறுணல் அரிசி, புழுக்கூடு கட்டிய உக்கல் அரிசி,கூட்டிஎடுக்கப்பட்ட கழிவு அரிசி என நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட அரிசியினை நான்கு வகைப்படுத்தலாம்.

இந்த அரிசி மனித பாவனைக்கு உகந்ததா? எனப் பரிசோதிப்பதற்கு யார் பொறுப்பு? என்பதை மக்களுக்குத்தெரியப்படுத்த வேண்டும்.

தரமற்ற அரிசிக்கு என்ன நடக்கிறது என்பதனை நாம் அறிய விரும்புகின்றோம்.

தரமற்ற அரிசி எவ்வாறு வந்தடைகின்றது என்பதை ஆராய்ந்தால் பின்வருவன புலனாகின்றன.

அ) கப்பலில் இருந்து கூட்டிய கழிவு அரிசி, கடல் நீர்பட்ட அரிசி.

ஆ) அரச களஞ்சியத்தில் இருப்பில் இருந்து பழுதடைந்த மற்றும் கூட்டிய கழிவு அரிசி.

இ) கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தில் இருப்பில் இருந்து பழுதடைந்த அரிசிகூட்டியகழிவு அரிசி

இவற்றை முற்றாக அகற்றி அழிப்பதற்குப் பதிலாக மக்களுடைய பாவனைக்குச் செலுத்தி விடுகின்றார்கள். ப.நோ.கூ. சங்கத்திலிருந்து தாம் அரிசியைப் பெறுவதினால் கலப்படம் இங்கேதான் இடம் பெறுவதாக மக்கள் கருதுகின்றார்கள்.

இதேவேளை, அரச களஞ்சியத்திலிருந்தும் கழிவு அரிசி வந்து சேர வாய்ப்புண்டு. மக்கள் தரமற்ற அரிசியைப் பெற்றது உண்மை.கலப்படத்திற்கு பலர் பொறுப்பாக இருப்பதனால் அதற்கான பொறுப்பைச் சுமத்துவது கஷ்டமானதாகும்.

### உலர் உணவு

தற்பொழுது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தின் அளவு குறைவு ஆகும். நாளொன்றுக்கு மூன்று நேர உணவின் படி கணக்கிட்டால் அரை மாதத்திற்கே இது போதுமானது. அத்துடன் மனிதனுக்குத் தேவையான கலோரியின் அரைப்பங்கை கூட இதனால் பூர்த்தியாக்க முடியாமலுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டே கூடிய உலர் உணவு வழங்கப்பட வேண்டும் என அன்று தொட்டு ஆதரவு பிரசாரம் செய்து வருகின்றோம். எமது பிரசாரத்தின் நோக்கம் அதிக அளவு உணவை மக்கள் பெறுவதற்காகவே. இதனை அரச அதிபருக்கு எதிரானதாகக் கருத வேண்டியதில்லை.

### நிவாரணம் பெறாதவர்கள்

நிவாரணம் வழங்கப்படாத இடம் பெயர்ந்த குடும்பங்களின் விவரங்களை பிரதேச வாரியாக பெறமுடியும். ஆனால் பயன கிடைக்குமா என்பது சந்தேகமே ஏனெனில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் இப்பணியில் ஏற்கனவே ஈடுபட்டு அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்த போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை,

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, நிவாரணம் பெறாத இடம் பெயர்ந்த மக்களை பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டால் உலர் உணவு நிவாரணம் பெறாதவர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என பத்திரிகைகளில் வெளியிடுமாறு அரச அதிபரைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மே மாதத்திற்கான நிவாரணம் பளை, சாவகச்சேரிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த பலருக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. பொதுவான வழிகாட்டல் இல்லாமையால் சில பிரதேச செயலர்கள் வழங்கவில்லை; சிலர் வழங்கியுள்ளனர்.

மே மாதத்திற்கான நிவாரணப் பொருள்களை ஏற்றுவதிலுள்ள தடங்கல்களினால் மேமாத நிவாரணம் உரிய காலத்திற்கு வழங்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது ஆனால் ஜூன் மாத நிவாரணம் வழங்கப்படுகின்றபோது மே மாதத்திற்கான நிவாரணமும் சேர்ந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மன்னாரில் இளம் பெண் கொலை; 7 படையினருக்கு எதிராக வழக்கு

மன்னார், ஜூலை 13

மன்னாரில் அழகியான இளம் பெண் காமலிற்றாவைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலைசெய்ததாக ஏழு படையினருக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு எடுக்கப்பட்டசமயமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது,

இந்த விசாரணையின் போது இரு படையினர் மட்டுமே நீதிமன்றில் ஆஜரானார்கள்.

இந்த வழக்கின் சந்தேக நபர்களான ஏனைய ஐந்து படையினரும் யுத்தமுனையில் பணிபுரிகின்றனர் என்றும். அவர்களை வேறு ஒரு நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடுமாறும் அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரினர்.

இதனை ஏற்க மறுத்த நீதிவான் ஐவருக்கும் எதிராகப் பிடியாணை பிறப்பித்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (இ-164-3)

# சங்கானையில் கோழிகளுக்கு அம்மைநோய்த் தடுப்பு மருந்து

சங்கானை கால் நடை வைத்தியர் பிரிவினரால் கோழிகளுக்கான அம்மை நோய் தடுப்பு மருந்து போடப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு கிராமமாக இந்த தடுப்பு மருந்து போடப்பட்டு வருகின்றது. தற்போது இளவாலை கிராமத்தில் தடுப்பூசி போடும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. சனசமூக நிலையங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களில் வைத்தே தடுப்பூசி போடப்படுகின்றது.

கோழிகளுக்கான அம்மை நோய் தடுப்பூசி யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்தியர் பிரிவுக்கு தற்போது போதியளவு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. நவம்பர் - டிசெம்பர் மாதங்களிலேயே கோழிகளுக்கான அம்மைநோய் வருவது வழக்கமாகையால் யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடை வைத்தியர் பிரிவினர் முன்னேற்பாடாக தடுப்பு மருந்தினை தருவித்து கோழிகளுக்குப் போட்டு வருகின்றனர்.

சென்ற ஆண்டு நவம்பர் - டிசெம்பர் மாதங்களில் கோழிகளுக்கு ஏற்பட்ட அம்மை நோயினால் கோழிகளின் இறப்பு அதிகரித்துக் காணப்பட்டது.

இம்முறை முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் பாதிப்பு குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோழிப் பண்ணையாளர்களும், கோழிவளர்ப்பாளர்களும், அம்மை தடுப்பூசியை ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் போட்டு முடிக்க வேண்டி இருப்பதால் தத்தமது பகுதி சனசமூக நிலையங்கள் மூலம் ஒழுங்குபடுத்தி அறிவித்தால் அந்த இடங்களில் சென்று தடுப்பூசி போடப்படும் என கால் நடை வைத்தியர் தெரிவித்தார். (இ-152)

## திருத்தம்

உதயன் 12-07-2000 ஆம் திகதிய இதழின் 10 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியகண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் எமது சங்கப்பணிப்பாளர் செல்வி க. கமலாம்பிகை அவர்களின் பாசமிகுதாயார் திருமதி கதிரவேலு நாகம்மா என்று அச்சானதை தயவுசெய்து எமது சங்கப் பணியாளர் செல்வி க. கமலாம்பிகை அவர்களின்.. என்று திருத்தி வாசிக்கவும்

# பாடசாலைகளில் மீன்பிடியியல் பாடத்தைக் கற்பிக்க நடவடிக்கை

பருத்தித்துறை, ஜூலை 13

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் மீன் பிடியியல் பாடத்தைக் கற்பிப்பதற்கு குடாநாட்டிலுள்ள வலயக் கல்வித் திணைக்களங்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

ஜி. சீ. ஈ. சாதாரண தர வகுப்பில் மீன் பிடியியல் பாடத்தைக் கற்பிப்பதற்கு இந்த ஆண்டு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் மீன் பிடியியல் பாடம் கடலக மீன் பிடியியல், உள்நாட்டு மீன் பிடியியல் என இரு பிரிவுகளாக கற்பிக்கப்படவுள்ளது. இந்த இரு பாட நெறிகளில் ஏதாவது ஒருபாடத்தை மட்டுமே பயில முடியும்.

இப்பாடங்களுக்கான வகுப்புக்களை ஆரம்பிக்கு முகமாக கற்கவுள்ள மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்கள் மூலமாக சேகரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இப்பாடங்களைக் கற்பிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது. (இ-118)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெற உள்ள ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் விண்ணப்பப் படிவங்களில் கையொப்பம் இடுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை 11 மணிக்கு முன்னர் கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்துக்கு வருமாறு கல்லூரி அதிபர் திருமதி சிவத்திரை சிவநாதன் கேட்டுள்ளார். (இ-8)

# தாய், சேய் சிகிச்சை நிலையம் குடத்தனையில் மீண்டும் இயங்கும்

பருத்தித்துறை, ஜூலை 13

மூன்று மாதகால இடைவெளிக்குப்பின்னர் தாய்,சேய் சிகிச்சை நிலையம்குடத்தனையில் நடைபெறவுள்ளது.

அம்பன் கிராமிய வைத்தியசாலை இராணுவ நடவடிக்கையால் மூடப்பட்டதால் இந்த சிகிச்சைப் பிரிவு செயற்படாமல் இருந்தது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து குடத்தனை தென் இந்திய திருச்சபை தேவாலய வளவில் இந்தச் சிகிச்சை நிலையத்தை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-118)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த பாக்கியநாதன் சற்குணநாயகி என்பவருடைய விசேட அ. அ. (இல. 666220978V) 10-07-2000 அன்று தாவடிக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அருள் விநாயகர் மோட்டோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (76355)

### விற்பனைக்கு

MK 25 (இந்தியன்) MK 12 (இங்கிலன்ட்) ஜெனரேற்றர் ஸ்ரபிளேசர் 1000 1500W RXC 47 National கெசற் றேடியோ, CD 240 W கெசற் றேடியோ, எலற்றிக் அயன், டெக் JVC HR 7,200 EG (உதிரிப்பாகம்) ஆகியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு R. ஜனார்த்தனன், 100, K.K.S. வீதி, பழைய பொலீஸ் நிலையம் முன்பாக, கன்னாகம். (76386)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. பழைய தொடர்பு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (76378)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது கேட்டை நட்சத்திரம் 8 இல் செவ்வாய்க்குற்றமுள்ள இறுதி ஆண்டில் பயிற்சி பெறும் அழகிய ஆசிரியைக்கு அரச உத்தியோகத்தர், பட்டதாரி பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணி புரியும் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விள. இல. 1058, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (76377)

### இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்க. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (76340)

## பாடசாலை இயங்குகின்றது

நல்லூர், ஜூலை 13

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் தற்சமயம் கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் காலை நேரப் பாடசாலையாக இயங்கி வருகின்றது. (க-103)

## சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றோர்

அரியாலை, ஜூலை 13

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் "கலைமுகம்" இதழ் அண்மையில் நடத்திய புத்தாயிரப் பரிசுக்கான சிறுகதைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

உடுவில் அரவிந்தனின் "ஈச்சம்பழம்" சிறுகதை முதலாவது இடத்தையும், ச. தாட்சாயணியின் "கண்ணீர்ப் பூக்கள்" சிறுகதை இரண்டாவது இடத்தையும், ச. சாரங்காவின் "அபிநயவிரல்களில்" சிறுகதை மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. (இ-17)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### திருமதி இராசலிங்கம் நாகேஸ்வரி

தோற்றம் 14 – 03 – 1970 மறைவு 13 – 06 – 2000

தாய்ப்பறவை நீ என்று
கூடிக் குலவிக் குதூகலித்தோம்
கூறாமல் நீ இன்று
கூடுவிட்டுப் பறந்ததனால்
சிறகிழந்து தவிக்கின்றோம்!
இணையில்லா வாழ்வினிலே
துணையின்றி நானும்
உன் குஞ்சுகளும்
கூவி அழும் குரல் கேட்டு
நீ ஒருகால் வாராயோ!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர், மச்சான்மார், மச்சாள்மார்.**

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (76374)

## நெஞ்சங் கலங்கி நிற்கும் ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
### நாகமணி சோதிலட்சுமி

மலர்வு 25-06-1950 உதிர்வு 24-06-1999

திதி: 13–07–2000

எமதருமை அம்மாவே!
ஒளியை ஏற்றிவிட்டு
எமை விட்டுப் பிரிந்து
சென்றீர்களே!
உங்கள் பிரிவால் இன்றும்
துயருறுகின்றோம்.
புத்தாயிரம் ஆண்டின் முன் இத்தரைவிடுத்து
இறைபதம் எய்திய எம் அம்மாவை எப்பிறப்பில்
காண்போம் இனி?

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

தகவல்:
மகள் சி. சசி
நவாலி வடக்கு,
புலவர் வீதி,
மானிப்பாய். (76342)

## சமுர்த்தி அலுவலர் நியமனம்

உரும்பிராய், ஜூலை 13

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் 9 நலன்புரி நிலையங்களிலும் வதியும் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைக் கவனிக்க சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தமது அன்றாடக் கடமைகளுடன் இப்பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-154-17)

## குளிரூட்டல்

மீண்டும் குளிரூட்டல் சேவையை தொடங்கி உள்ளோம்.

**கடல் உணவுப் பொருள்கள், இறைச்சி வகைகள் குளிரூட்டிக் கொடுக்கப்படும்.**

### ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்,
**213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(76382) T. P. 2916

## பாலஸ்தாபனம்

சுதுமலை அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் திருக்கோயிலில் நாளை (14—07—2000) வெள்ளி காலை 7 மணி 59 தொடக்கம் 8 - 59 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் சிவன், அம்பாள், விநாயகர் முதலிய பரிவாரமூர்த்திகளுக்கு பாலஸ்தாபனம் நடைபெறுகின்றது.


பாலஸ்தாபன பிரதமகுரு
பிரம்மஸ்ரீ தானு - வாசுதேவக்குருக்கள்
சிவன் கோயில், இணுவில்.

சர்வசாதகர்
பிரம்மஸ்ரீ ம. தானுநாதக்குருக்கள்
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

தேவஸ்தான பிரதமகுரு
நிர்வாகி
பிரம்மஸ்ரீ க. இராசாக்குருக்கள்

(76381)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் சிதம்பரம் கணேசன்

(சோதிடர், மாவை கலட்டி)
(A C இயக்குநர் ல.சி. நிறுவனம்)

அன்னை மடியில் 21-11-1947 அம்பிகை அடியில் 13-06-2000

கம்யூனிச நெறியிலே காலடி பதித்தவரே
கப்பலிலே "காயத்தை" விட்டதென்ன...?
வித்தியோ தயத்திற்காய் உழைத்த சோதிடனே
புன்னகையால் பூவுலகை வென்றவரே
புனித புத்தன் போல் காருண்யம் காத்தவரே
மனங் குளிரச் சிரித்தொளிரும் நின்முகம் எங்கே?
நல்லோர் தேடியழ! ஊரே வாடியழ!
உறங்கிப் போனதென்ன?
உனைப்போல் தலைவரை மகானைக் காண்பதெப்போ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (13-07-2000) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

"றோசா வாசம்"
அளவெட்டி கிழக்கு. (76387)

# பிராந்திய சபைகளின் அதிகாரங்கள் சில

உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட உள்ள பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் சில வருமாறு:-

☆ மத்திய அரசாங்கத்திற்கு செலுத்தக்கூடிய கடன் தவிர்ந்த ஏனைய கடன்களை வசூலிப்பது.
☆ பிராந்திய நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்ட தண்டப் பண வசூலிப்பு.
☆ பிராந்திய லாட்டரிசீட்டுகளை நடத்துவதற்கான உரிமை.
☆ உள்நாட்டு வெளிநாட்டு கடன்களை பெறுவது.
☆ காணி சொத்து வரிவசூலிப்பு
☆ பிராந்திய குறைகேள் அதிகாரியின் நியமனம்.
☆ வெளிநாட்டு முதலீட்டை நிர்வகிப்பதற்கான அதிகாரம்.
☆ பிராந்திய பொது சேவைகள் ஆணைக்குழுவின் நியமனம்.
☆ பிராந்திய சுகாதார சேவை.
☆ காணி அதிகாரம் (சரத்து XVIக்கு அமைய)
☆ பிராந்தியத்திலுள்ள துறைமுகங்கள் மீன்பிடித் துறைமுகங்களை நிர்வகிப்பது (மத்திய அரசுக்குரிய விடயங்கள் தவிர)
☆ நிவாரணம் வழங்கல், புனரமைப்பு, நஷ்டஈடு வழங்கும் அதிகாரங்கள்.
☆ சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்டல் பிராந்திய பொலீஸ் சேவை.
☆ பொலீஸ் கமிஷன் அமைத்தல் (சரத்து XXIIக்கு அமைய)
☆ நீதிபரிபாலன அதிகாரம்.
☆ அரசியலமைப்பில் வழங்கப்பட்ட ஏனைய அதிகாரங்கள்.

# மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் சில

உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் சில வருமாறு:

☆ பாதுகாப்பு தேசியபாதுகாப்பு, தேசிய பொலீஸ் சேவை பாதுகாப்புப் படைகள் விசேட பாதுகாப்புப் படைகளின் நியமனம்.
☆ குடிவரவு குடியகல்வு மற்றும் பிரஜா உரிமை வழங்கல்.
☆ வெளிவிவகார உறவுகளும் வெளிவிவகார கொள்கைகளும்.
☆ தேர்தல்களை நடத்துவது.
☆ நாணயம் மற்றும் வெளிநாட்டு நாணயம் சம்பந்தமான அதிகாரங்கள்.
☆ வங்கி சட்டதிட்டங்களை உருவாக்குதல்.
☆ வருமான (தனியார்/நிறுவனங்கள்) வசூலித்தல். கலால் வரி வசூலித்தல்.
☆ சுங்கவரி, ஏற்றுமதி இறக்குமதிவரிகள் வசூலித்தல் ஆகியவை அடங்கலான அதிகாரங்கள்.
☆ பிராந்திய பட்டியலில் குறிப்பிடாத ஏனைய வரிகளை வசூலிப்பது.
☆ தேசிய லொத்தர் சீட்டுக்களை நடத்துவது.
☆ அணுசக்தியின் நிர்வாகம்
☆ பிராந்திய ரீதியில் ஓடும் ஆறுகளும் பல பிராந்தியங்களுக்கு பொதுவாக ஓடும் ஆறுகளும் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வரும்.
☆ சர்வதேச போக்குவரத்துக்கு பயன்படும் விமான நிலையங்களும், துறைமுகங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரும் ரயில்வே சிவில் விமானப்போக்குவரத்தும் பெருந்தெருக்களும் இதில் அடங்கும்.
☆ தபால் தொலை தொடர்புகள் மத்திய அரசின் பரிபாலனத்தின் கீழ் வரும்.
☆ தேசிய அரசாங்க சேவை, தேசிய அரசாங்க சேவை கமிஷன் ஆகியவை மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ்வரும்.
☆ தேசிய சுகாதார நிர்வாகம்(விசேட வைத்தியசாலைகள். போதனா வைத்தியசாலைகள்) மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.
☆ பிராந்தியத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரம் தவிர நீதிபரிபாலன நிர்வாகம்.
☆ இலங்கையின் நீர்ப்பரப்புக்கு வெளியே மீன்பிடிப்பதற்கான படகு பதிவு, அனுமதி ஆகியன.
☆ கடல்வள பாதுகாப்பும் அபிவிருத்தியும் தேசிய சர்வகலாசாலைகள், பல்கலைக்கழக மானியகமிஷன் ஆகியன மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ்வரும்.
☆ புதிய அரசியலமைப்பு சட்டம் அமுலாக்குவதற்குமுன் அரசின் உரிமையாக இருந்த தேயிலை, றப்பர், .தென்னை, செம்பனை, எண்ணெய்த் தோட்டங்கள் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் வரும்.
☆ வெளிநாட்டு வர்த்தகம்.
☆ தேசிய ரீதியிலான காணிபாவனைக் கொள்கையும் திட்டமிடலும்.
☆ தேசிய பூங்காக்கள், இயற்கைவளங்கள், வனப்பாதுகாப்பு பிரதேசங்கள், வனவிலங்கு பாதுகாப்பு பிரதேசங்கள் ஆகியன மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ்வரும்.
☆ பிராந்திய அதிகாரங்கள் தொடர்பான பட்டியலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள்.

## சிங்கர் கிண்ண கிரிக்கெட்

# தென்னாபிரிக்காவிடம் பாகிஸ்தான் தோல்வி!

### இறுதி ஆட்டம் நாளை

சிங்கர் கிண்ணத்துக்கான முத்தரப்பு சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44.2 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் டேவிட் ரேபுறாச் 8 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 38 ஆவது ஓவரில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் டேவிட் ரேபுறாச் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் தொடரின் இறுதியாட்டம் நாளை கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இதில் தானவிளையாடிய நான்கு ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற இலங்கை அணியுடன் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி மோதவுள்ளது.

இந்தத் தொடரில் பங்குபற்றிய மூன்றாவது அணியான பாகிஸ்தான் விளையாடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## விவசாய காப்புறுதி

யாழ்ப்பாணம்,ஜுலை13

யாழ். மாவட்டத்தில் 1999 - 2000 வருட நெற்பயிர் காப்புறுதிக்கு விண்ணப்பித்தவர்களில் 71 விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜுலை13

நேற்று காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 106 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 64 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தாபற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை13

ஆரம்பக் கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## வெற்றிடமாக விரிவுரையாளர் பதவிகள்

யாழ்ப்பாணம்,ஜுலை13

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நிரந்தர ஆங்கில விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை என்று அதன் இயக்குநர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இருவருக்கு கல்விப் பகுதியினரின் அனுமதி கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கடமையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 6 ஆங்கில விரிவுரையாளர்கள் பதவிகள் வெற்றிடமாக இருந்துவருகின்றன. (இ-10)

## செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை13

எரிபொருள் மற்றும் நிவாரண விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பொறுப்பதிகாரிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறும் யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை -

யாழ். மாவட்ட தள நிலவரம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்றும் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-9-5)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜுலை13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம், யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 11 ஆவது நினைவு தினம் யாழ். நகரிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இன்று காலை 9 மணிக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். மாநகரசபை உறுப்பினர் செ.கந்தையன் தலைமையில் நடைபெறும் இந்த நினைவு தின நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு இருவரின் உருவப் படங்களுக்கும் அஞ்சலி செலுத்தி மலர் மாலைகள் அணிவிப்பர். (ஐ-5)

## திருத்தம்

நேற்றைய உதயன் 2ஆம் பக்கத்தில் வெளியான S.N. அரசரத்தினம் ஓய்வுபெற்ற ஆசிரியரின் 45ஆம் நாள் நினைவஞ்சலி விளம்பரத்தில் -

தற்காலிக முகவரி: இல.71, பிரதான வீதி, **சங்கத்தானை** என்று பிழையாக அச்சாகிவிட்டது. அதனைச் **சங்கானை** எனத் திருத்தி வாசிக்கவும்.



யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை ஊழியர்கள் நேற்று மறியலில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் நா.தணிகாசலம்பிள்ளையிடம் ஊழியர்கள் மகஜர் கையளிக்கின்றனர். (ஐ-4)

# மாகாணக் கல்விப் பணிமனை ஊழியர் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படாமையைக் கண்டித்து அதன் ஊழியர்கள் நேற்று அடையாளப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போதியளவு தளபாடங்கள் இல்லாமை,வாகன வசதியின்மை, தொலைபேசி இணைப்பு வழங்கப்படாமை போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த அலுவலகத்தில் 13 ஊழியர்கள் கடமையாற்றி வருகின்ற போதும் நான்கு மேசைகள் மாத்திரமே உள்ளன. இதனால் ஊழியர்கள் நின்று கொண்டு கடமை செய்ய வேண்டியுள்ளது. அங்கு மலசலகூட வசதிகள் கூட இல்லாதிருப்பதாக ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த அலுவலகம் ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்த அரசாங்க அதிபர் கூட இது விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகக் குறிப்பிட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், கடந்த ஆறு மாத காலங்களாக குறிப்பிட்ட விடயங்கள் பற்றி கல்வி அமைச்சின் செயலாளருக்கு பல கடிதங்களை அனுப்பி வைத்த போதும் இதுவரை உரியவர்களிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

பகிஷ்கரிப்பின் இறுதியில் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஊழியர்கள் மேலதிக கல்விப் பணிப்பாளர் நா.தணிகாசலம் பிள்ளையிடம் கையளித்தனர். அதன் பிரதி யாழ். அரச அதிபருக்கும் வழங்கப்பட்டது. (ஐ-10-4)

# குமண, லங்கா முடித்த கப்பல்களில் பொருள்கள் இறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜுலை13

'லங்கா முடித்த' மற்றும் 'குமண' கப்பல்களில் குடாநாட்டுக்குத் தேவையான ஐயாயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளதுடன் தனியார் நிறுவனங்களுக்கான பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

காங்கேசன் துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மேற்படி கப்பல்களில் பொருள்களை இறக்கும் பணிகள் முடிவடைந்ததும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை - தனியார்துறையினருக்கான ஒரு தொகுதி சிமெந்தை ஏற்றிக் கொண்டு 'பொல் கொட' கப்பல் குடாநாட்டை நோக்கி புறப்படத் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-9-8)

## டிப்புளோமா பரீட்சை

திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்புளோமா பகுதி 2 இறுதியாண்டுப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். (க)

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி திக்கம் வடிசாலை ஊழியர்

**திரு. முருகேசு நவநேசன்**

அவர்களின் அன்பு மனைவி

**திருமதி நவநேசன் தீபஜோதி**

அவர்கள் 12-07-2000 அன்று அகால மரணமானார். அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வடமராட்சிக் கொத்தணி,**
**திக்கம் வடிசாலை.**

(C/12201)

## மரண அறிவித்தல்

**திருமதி நவநேசன் தீபஜோதி**

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவநேசன் தீபஜோதி 12-07-2000 அன்று அகால மரணமானார்.

அன்னார் முருகேசு நவநேசனின் (காசாளர், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வடமராட்சி), அன்பு மனைவியும், காருண்யா, நிதர்சனா, கானுப்பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், பொ.மகாலிங்கம், திருமதி மகாலிங்கம், செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், அமரர் சத்தியலிங்கம், பொன்கலன், செல்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ச.ரஜனி, பொ.பகீரதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-07-2000) காலை 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அல்வாய் மேற்கு,*
*அல்வாய்.*

தகவல்:
**ம.செல்வேஸ்வரன்**
(சகோதரன்)

(C/12200)

# பாதாள உலகக் கும்பல்களிடம் அதி நவீன ஆயுத தொழில்நுட்பம்!

தெற்கில் ஆள்கடத்தல், கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவினர் தமது தாக்குதல்களுக்கு அதி நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 5ஆம் திகதி ஹங்கடவல நீதிமன்றத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட அரச பகுப்பாய்வாளர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் படியே இந்த விவகாரம் தெரிய வந்துள்ளதாக பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கிளைமோர் ரகத்தைச் சேர்ந்த குண்டை உயர் தொழில் நுட்பம் கொண்ட 'ரிமோட் கொன்ட்ரோல்' கருவி மூலம் - இயக்கியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் -

முன்னர் சாதாரண துப்பாக்கிகள் மூலம் தாக்குதல்களை நடத்தி வந்த பாதாள உலகக் குழுவினர் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பாவிப்பதால் மிக அவதானமாக இருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றும் -

பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

அதேசமயம் -

பாதாள உலகக்குழுவின் உறுப்பினர்களை வீடுகளில் தங்க அனுமதிக்க வேண்டாம் என்றும்-

இந்த நடைமுறையை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# இன்று முதல் நான்கு தினங்கள் வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

புளொட் அமைப்பினால் இன்று தொடக்கம் நான்கு நாள்களுக்கு 11 ஆவது வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வெ.யோகேஸ்வரன் ஆகியோர் மறைந்த தினமான இன்று தொடக்கம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஸ்தாபகரும் செயலதிபருமான அமரர் க.உமாமகேஸ்வரன் மறைந்த தினமான எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இத்தின[illegible] அனுஷ்டிக்கப்படும் என்[illegible] [illegible]ழீழ மக்கள் விடுதலைக்க[illegible]தின் செய்திக் குறிப்பில் தெ[illegible]கப்பட்டுள்ளது.

வீரமக்கள் தினம் இன்று சிர[illegible] தானப் பணிகள், இரத்ததான வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இத்தினத்தில் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த போராளிகள், பொதுமக்கள் ஆகியோரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்றும் அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவருக்கு கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை13

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு அடுத்த சில தினங்களில் இடம்பெறவுள்ள 'சிற்றி ஓவ் ரிங்கோ' கப்பலில் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே பயணம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணம் செய்யும்பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயணச் சீட்டுக்கள் இன்று வழங்கப்பட இருக்கின்றன.

இந்தக் கப்பலில் பொதுமக்கள் எவரும் அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கப்பலில் சிமெந்து

நெல்லியடி,ஜூலை13

ஆயிரத்து 400 மெற்றிக் தொன் சிமெந்து ஏற்றிய 'பொல் கொட' என்ற கப்பல் கடந்த செவ்வாய் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து சிமெந்து இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஐ-109)

## ஆலயக் கிணற்றில் 127 ஷெல்கள்!

வவுனியா,ஜூலை13

கிளிநொச்சி நகரில் உள்ள கந்தசுவாமி கோவில் கிணற்றில் இருந்து 127 ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆலய பரிபாலன சபையினர் கிணற்றை துப்புரவு செய்தபோது இந்த ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.இரண்டு பெட்டிகளிலும் தனித்தனியாகவும், வெடிக்காத நிலையில் இந்த ஷெல்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி நகரப் பகுதியில் முன்னர்படைமுகாம் அமைந்திருந்த பகுதியில் இந்த ஆலயம் உள்ளது. (ஐ-4)

## தீர்வுயோசனை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாக வெட்டுஒன்று துண்டு இரண்டாக கூறிவிட்டன.

நேற்று அரசாங்கத் தரப்பைச் சந்தித்த ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் இரண்டும் இப்போதைய வடிவில் தீர்வு யோசனையை ஏற்க முடியாது என்றும் -

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் விதத்தில் இதனை மாற்றி அமைக்காவிடில் முற்றாக நிராகரிக்க நேரிடும் என்றும்- திட்டவட்டமாகத் தெரிவித்தன.

காணி அதிகாரம் தொடர்பாக ஈ.பி.டி.பியினர் யோசனை ஒன்றை முன்வைத்ததாகவும், வடக்கு-கிழக்கு இணைப்பு, இந்தியப் பிரஜாவுரிமை உள்ள மக்களின் விடயம் தொடர்பான அம்சங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று கோரியதுடன் அவற்றுக்கான மாற்று யோசனைகளை சமர்ப்பித்ததாகவும் தெரியவந்தது.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இந்த யோசனை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்று கூறி அடியோடு நிராகரித்துவிட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் தீர்வு யோசனை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

அரசும் ஐ.தே.கவும் எட்டியுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள தீர்வு யோசனையை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

95 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்வு யோசனையையே ஏற்க முடியாது என்று அப்போது கூறினோம். இன்று அதிலும் குறைவாக வந்துள்ள தீர்வுத் திட்டத்தை எவ்வாறு ஏற்பது?

கடந்த13 வருடங்களாக வடக்கு - கிழக்கு இணைந்திருந்தது. இன்று அதைப் பிரிக்க முனைவதை அனுமதிக்க முடியாது - என்றார்.

ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா தீர்வு யோசனை குறித்து உதயனுக்கு கருத்துக் கூறுகையில் -

தீர்வு யோசனைகள் மரபு வழி வந்த தமிழர் தாயகத்தை துண்டாடுவதுடன் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாதத்தால் அதை முற்றாக நிராகரிக்கின்றோம்..அரைகுறை அதிகாரம் வழங்கும் இந்தத் திட்டம் நிரந்தரத் தீர்வைத் தராது - என்றார். (அ-3-4)


## பொதுக்கூட்டம்

**அனைத்து பீட மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் இன்று (13-07-2000) வியாழக்கிழமை 1.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும் .**

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

(76399)

## மீண்டும்

**மகாநதி புடைவையகத்தின் பிளவுஸ் பீஸ் காட்சியறை அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.**

*இல.16, நவீனசந்தை(மேல்மாடி), யாழ்ப்பாணம்.*

(C/12194)

## யாழ். பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் விஷேட பொதுக்கூட்டம்.

காலம் :- இன்று (13.07.2000) வியாழக்கிழமை. மாலை 4.30 மணி.
இடம் :- முகாமைத்துவ மண்டபம் - I
விடயம் :- அரச அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிதியினை வழங்குதல்.

அனைத்து வவுனியா மாவட்ட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வவுனியா மாமவட்ட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(76380)


## சந்தேக........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸார், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் இருந்து அறிக்கை ஒன்றை கோரியுள்ளனர்.

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புகள் மீதான மரபணுச் சோதனைகளைச் செய்வதற்கு வெளிநாட்டு ஆய்வுகூடம் ஒன்று சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த சோதனைகளை உள்நாட்டில் செய்யமுடியாது என்று தெரிவிக்கப்பட்டதால் மரபணுச் சோதனையில் பிரபல்யமிக்க மூன்று வெளிநாட்டு ஆய்வு கூடங்களின் உதவியை அரசாங்கம் கோரியிருந்தது. அவற்றில் ஒன்று சோதனைகளைச் செய்து விவரம் அறிவிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

## மானிப்பாய்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு முடிவு செய்யப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை வெளியேற்றி கல்விச் செயற்பாடுகள் தடையின்றி நடைபெற ஆவன செய்யுமாறு கோரி இந்த இரண்டு கல்லூரிகளின் மாணவர்களும் நேற்று மறியல் போராட்டத்தில் குதித்தனர். இதனை அடுத்தே அப்பகுதி பொலீஸ் அதிகாரிகள் மற்றும் யாழ். செயலக அதிகாரிகள் ஆகியோர் இது விடயத்தில் தலையிட்டனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே ஓர் இணக்க நிலையை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் மற்றும் இரு பாடசாலைகளினதும் அதிபர்கள், சண்டிலிப்பாய்க் கோட்ட கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், மானிப்பாய்க் கிராம அலுவலர், ஆசிரியர் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள், பெற்றோர் சார்பிலான பிரதிநிதிகள், பழைய மாணவர்களின் பிரதிநிதிகள் ஆகியோரும், மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணதிலகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வேறு இடங்களில் குடிசைகள் அமைத்து அவர்களை அங்கு குடியமர்த்த ஏற்பாடு செய்வதாகவும் -

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏற்கனவே குடிசைகளை அமைத்துள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் -

மேலதிக அரச அதிபர் உறுதியளித்தார்.

பரீட்சைகள் நெருங்குவதால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை முழு அளவில்இயங்க வைக்க கல்லூரி நிர்வாகம் முயற்சித்ததை அடுத்து அங்கு தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கும் பாடசாலைத் தரப்பினருக்கும் இடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது தெரிந்ததே. (ஐ-4-8-15-139)

# போலி தேசிய அ.அட்டை விவகாரம்

# கைதான 6 இளைஞர்களும் நீதிமன்றத்தால் விடுதலை!

யாழ்ப்பாணம்,ஜூலை13

போலி தேசிய அடையாள அட்டையை வைத்திருந்தார்கள் என்று தெரிவித்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இளைஞர்களான ஆறு சந்தேக நபர்களும் யாழ். நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

"ஆள்பதிவுக் கட்டளைச் சட்டம் 250இன் 41ஆம் பிரிவின் பிரகாரம் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் எழுத்து மூலம் தொடர்பான சம்மதம் இல்லாது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை நான் அவதானிக்கின்றேன். எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து சந்தேக நபர்களை விடுதலை செய்கின்றேன்." என்று நீதிவான் பா.சுப்பிரமணியம் சந்தேக நபர்களை விடுதலை செய்யும் தீர்ப்பில் தெரிவித்தார்.

போலியான அடையாளஅட்டை வைத்திருந்தார்கள் எனத் தெரிவித்து கடந்த 9 ஆம் திகதி தட்டா தெருவில் வைத்து கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களும் மீண்டும் யாழ்.நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயமே இந்த தீர்ப்பை நீதிவான் வழங்கினார்.

பிரஸ்தாப நபர்களின் அடையாள அட்டைகளை பரிசோதனை செய்யும் கருவி நேற்று நீதிமன்றுக்கு எடுத்துவரப்பட்டு நீதிவான் முன்னிலையில் அடையாள அட்டைகள் பரிசோதனைக்கு உட்படுத்தபட்டன.

அந்த அடையாள அட்டைகள் போலியானவை என்று அந்தக் கருவி காண்பித்தது. இந்தக் கருவியின் இயக்கம் குறித்து சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

இதனைக் கவனத்தில் கொண்ட நீதிமன்றம் பிரஸ்தாப நபர்களை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியது. பொலீஸார் வசமுள்ள பிரஸ்தாப நபர்களின் துவிச்சக்கர வண்டிகளை அவர்களிடம் ஒப்படைக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் அடையாள அட்டைகளை ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி பரிசோதனை செய்யப் பொலீஸாருக்கு அனுமதி வழங்கிய நீதிவான் பிரஸ்தாப நபர்களுக்குத் தற்காலிக பற்றுச்சீட்டு வழங்கும் படியும் தெரிவித்தார்.

அதே சமயம் -

சந்தேக நபர்களில் ஒருவரான வன்னியசிங்கம் இந்திரகுமார் என்பவர் ஜி.சீ.ஈ(உயர்தர) பரீட்சைக்கு தோற்றுபவர். தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சையில் அவர் தோற்ற வசதியாக கடந்த திங்கள் அன்று யாழ் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.(ஐ-3-9)

## ஜனாதிபதியின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை வழங்கிய உதவிக்கு ஜனாதிபதி அந்தச் செய்தியில் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

ஜனாதிபதியின் விசேட தூதுவராக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் ஈரானுக்குச் சென்றுள்ளார். அத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜனாதிபதி விசேட தூதுவர்களை அனுப்ப விருக்கின்றார்.

## வட - கிழக்கில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் ரவூப் ஹக்கிம் தெரிவித்தார்.

"இம்முறை தேர்தலில் எமது கட்சி தனித்துப் போட்டியிடுவதென எடுத்த முடிவை நாம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலகிவிட்டோம் எனக் கருதிக் கொள்ள முடியாது.

"தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை பொதுசன ஐக்கிய முன்னணிக்கான எமது பங்களிப்புத் தொடரும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## தரிக்காமல்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்த பொலீஸார் வானில் இருந்து ஜப்பானிய தயாரிப்பான பிஸ்ரல், துப்பாக்கி, அமுக்கவெடி ஆகியவற்றைக் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலீஸார், அந்த வானின் உரிமையாளரான தமிழரைக் கைது செய்துள்ளனர். (ஐ-3-4)

## மேலும் விவாதிக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பட்டி வீரக்கோன், இந்திகா குணவர்த்தனா ஆகியோரும் -

ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், என். தவராசா, கட்சியின் ஆலோசகரான எஸ்.விக்கினேஸ்வரன் ஆகியோரும்-

புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், செயலாளர் எஸ்.சதானந்தன், மத்திய குழு உறுப்பினர் எஸ்.சிவனேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

"தற்சமயம் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தில் அரச காணி, வடக்கு - கிழக்கு இணைப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு ஆகிய விடயங்கள் ஏற்கமுடியாதவை. அவை தமிழ் மக்களின் அபிலாசைகளை திருப்தி செய்வதாக இல்லை.

"இந்த யோசனைகளை முற்றாக நிராகரிப்பதற்கு முன்னர் ஐ.தே.கவுடனும் பேசவிரும்புகின்றோம். அதற்கான ஏற்பாட்டை - அதாவது அரசு - ஐ.தே.க. - தமிழ்க் கட்சிகள்- கொண்ட முத்தரப்புப் பேச்சை - அரசு ஒழுங்கு செய்ய வேண்டும்." என்று தமிழ்க்கட்சிகள் இரண்டும் தெரிவித்தன.

95ஆம்ஆண்டுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தற்போது முற்றாக மாற்றப்பட்டுள்ளன என்று இரு தமிழ்க் கட்சிகளும் சுட்டிக்காட்டின.

முத்தரப்புக்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாத பட்சத்தில் தீர்வு யோசனைகளை முற்றாக நிராகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தமிழ்க் கட்சிகள் இரண்டும் அரசுத்தரப்புக் குழுவிடம் தெரிவித்தன. (ஐ-3-4-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.